

# தென்னாடு

செந்தமிழாகம சிவமடம். கொக்குவில். யாழ்ப்பாணம். www.thennadu.org

வள்ளுவர் ஆண்டு 2053 மடங்கல் நல்லோரை ஆவணித் திங்கள் 13ம் நாள் நிறைமதி (30-08-2023 புதன்கிழமை) வெளியீடு +94 21 221 2739


## தருமை ஆதீனம் யாழ் வருகை



தருமை ஆதீன 27வது குருமகாசந்நிதானம் சீர் வளர்சீர் கயிலை மாசிலா மணி தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் நல்லைக்கந்தன் தேர்காண யாழ் வருகிறார்கள்.

# நட்சத்திரப் பிறந்தநாளையே கொண்டாடவேண்டும்

# மெழுகுவர்த்தி அணைப்பது தமிழர் பண்பாடு அல்ல

தொன்று தொட்டுத் தமிழர்கள் நட்சத்திரப் பிறந்தநாளையே கொண்டாடி வந்தனர். அதுவே அவர்களின் பண்பாட்டு ஆதியை அடையாளப் படுத்தி நின்றது. இதற்கு பலவகையான இலக்கியச் சான்றுகள், கல்வெட்டு ஆதாரங்கள், வரலாற்று ஆவணங்கள் உள்ளன. அதை விடுத்தது தற்போது ஆங்கிலத் திகதியில் பிறந்தநாள் கொண்டாடுவது, அணிச்சல் (கேக்) வெட்டுவது மேலாக விளக்கை ஊதி அணைப்பது (மெழுகுவர்த்தி) போன்ற அமங்கலச் செயல்களை செய்து பிறந்தநாள் கொண்டாடுவது ஒரு நாளும் தமிழர் மரபு ஆகாது.

தொல்காப்பியத்தில் பாடாண் திணையில் பிறந்த தினத்தினை, நாள் மங்கலம் என்று குறிப்பிடப்பட்டிருக் கிறது. இலங்கிலைவேல் கிள்ளி அவர்களின் நாள்மங்கலம் பற்றிக் கூறும் பாடலைக் கவனிக்கவும்.

**அந்தணர் ஆவொடு பொன்பெற்றார், நாவலர்**
**மந்தரம்போல் மாண்ட களிறூர்ந்தார் - எந்தை**
**இலங்கிலைவேற் கிள்ளி இரேவதி நாள் என்னோ**
**சிலம்பிதன் கூடிழந்த வாறு**

இங்கு கிள்ளிவளவனின் நாள்மங்கலம் இரேவதி நட்சத்திரத்தில் கொண்டாடப்பட்டது என்பது இலக்கியச் சான்றாகிறது.

இனி, இராசராச சோழனின் பிறந்தநாள் கலிங்கத்துப்பரணி என்ற நூலில், சதயவிழா என்று தெளிவாக குறிப்பிடப்பட்டிருக்கிறது.

**சதய நாள்விழா உதியர் மண்டலம்**
**தன்னில் வைத்தவன் தனியொர் மாவின்மேல்**
**உதய பானுவொத்து உதகை வென்றகோன்**
**ஒருகை வாரணம் பலக வர்ந்ததும்.**

அதுபோல் இராசராச சோழனின் மகன், கங்கைகொண்ட சோழன் பிறந்தநாள் மார்கழித் திருவாதிரை ஆகும். இத்தினத்தில் கங்கைகொண்ட சோழன், என்னென்னவற்றைத் தான மாகக் கொடுத்தான் என்பதை ஒற்றியூர்க் கல்வெட்டு சொல்கிறது.



ஒரு சோழ அரசன், சூரிய கிரகணமும் உத்தராட நட்சத்திரமும் கூடிய நாளில் பிறந்தான். இந்நாள் சிறப்பல்ல என்று கருதி, அதற்காக உடுமலைக்கு அருகில் கொழுமம் என்ற ஊரில் தாண்டகேசு வரர் எனும் ஒரு சிற்பக் கோயிலைக் கட்டினான் என்று கல்வெட்டு சான்று உள்ளது.

ஆகவே இதன் வழி, தமிழர்கள் நட்சத்திரப் பிறந்தநாளையே கொண்டாடினார்கள், கொண்டாடவேண்டும் என்பது புலனாகிறது. அத்துடன் உங்கள் பிறந்தநாள் அன்று மற்ற உயிர்களுக்கு இறந்தநாளைக் கொடுக்காமல் புலால் தவிர்த்தலே அறம்.

**கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி**
**எல்லா உயிருந் தொழும்** - குறள் 260

அணிச்சலுக்கு (கேக்) பதிலாக பொங்கல் வைத்தல், பால் காய்ச்சுதல் போன்ற தமிழர் மரபுவழி உணவுகளுடன் கொண்டாடுவதே சாலச் சிறந்தது. அத்துடன் மெழுகுவர்த்தியை அணைத்தல் தமிழ் பண்பாடு அல்ல எனவே விளக்கினை ஏற்றி இறை வழிபாட்டுடன் கொண்டாடுவதே சிறப்பு.

**இல்லக விளக்கது இருள் கெடுப்பது**
**சொல்லக விளக்கது சோதி உள்ளது**
**பல்லக விளக்கது பலருங் காண்பது**
**நல்லக விளக்கது நமச்சிவாயவே** - அப்பர் தேவாரம்

எண்ணெய்த் தீபம் ஏற்றுவது தான் சிறப்புடையது. மனதில் இருக்கும் தீய சிந்தனைகள் எனும் இருளை நீக்கி நல்லறிவு எனும் ஒளிபெறச் செய்வது இவ்விளக்கு. எண்ணெய் ஊற்றி திரி போட்டு விளக்கேற்றுபவர்களை தெய்வம் என்றும் பிரியாமல் இருந்து அருள்பாலிக்கும் என்பது ஆன்றோர் வாக்கு. **“விளக்கிட்டார் பேசு சொல்லின் மெய்ஞ்நெறி ஞானம் ஆகும்”** என்கிறார் திருநாவுக்கரசு சுவாமிகள். **“விளக்கேற்றினால் நல்லறிவு கிட்டும்”** என்பது இதன் பொருள்.

முதுபெரும் புலவர் சிவத்திரு. ந. இரா சென்னியப்பனார் ஐயாவின் 90வது அகவை நாளான ஆடி ஆயிலியத்தில் (16-08-2023) நடந்த அவரின் ஏற்புரையில், ஐயா வழங்கிய கருத்துகளின் தொகுப்பே இந்தச் செய்திச் சுருக்கம். (படம் - ஓவியர் தெய்வேந்திரன் ஐயா மதுரை).

## சந்திரயான் தரையிறங்கிய நிலவுப் பகுதிக்கு “சிவசக்தி” முனை எனப் பெயர்



கடந்த திங்கள் விண்ணில் ஏவப்பட்ட சந்திரயான் - 3, கடந்த புதன் கிழமை நிலவின் தென் துருவப் பகுதியில் வெற்றிகரமாகத் தரையிறங்கியது. எவருமே இதுவரை செய்யாத இந்த வரலாற்றுச் சாதனையை இந்தியா படைத்தது. சந்திரயான் தரையிறங்கிய நிலவுப் பகுதிக்கு ”சிவசக்தி” முனை எனப் பெயர் சூட்டினார் இந்திய பிரதமர் நரேந்திர மோடி அவர்கள். கங்கையைச் சடையில் வைத்தவரும், மதி சூடியவரும் ஆகிய சிவபெருமானின் பெயரை வைத்தது நிச்சயமாகப் பாராட்டவேண்டியதே.

## சென்னியப்பனார் ஐயாவிற்கு அகவை தொண்ணூறு



கோவை, பேரூர் தவத்திரு சாந்தலிங்க அடிகளார் கலை அறிவியல், தமிழ்க் கல்லூரி மேனாள் முதல்வரும், மணிவாசகர் அருட்பணி மன்ற அறக்கட்டளைத் தலைவரும், “சமயத்தமிழ்” திங்களிதழ் ஆசிரியருமான சித்தாந்த சரசுவதி ந. இரா. சென்னியப்பனார் அவர்களது 90 ஆம் அகவை விழா ஆடி ஆயிலியத்தில் (திருவள்ளுவராண்டு 2054 ஆடித்திங்கள் 31 ஆம் நாள் (16.8.2023 புதன்கிழமை) கோயமுத்துர், பொள்ளாச்சி நெடுஞ் சாலை, ஈச்சனாரி, கேமாம்பிகா திருமண மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.

இதில் தமிழ் வேள்வி வழிபாடு, விழா நாயகருக்கு நன்னீராட்டு, குரு மகா சந்நிதானங்களின் அருளுரைகள் மற்றும் ஆசியுரைகளுடன் சிறப்புற நடைபெற்றது. இதில் தென்னாடு மடம் சார்பாக சிவமாதவன் மற்றும் சத்தி பங்குபற்றி காணொளிப் பதிவுகளை செய்திருந்தனர். தென்னாடு மடத்தின் முதல்வர் தென்னவன் பார்த்தீபன் அவர்களும் ஐயாவிற்கு வாழ்த்துகளை தெரிவித்திருந்தார்.



# சிறப்பாக நடைபெற்ற பிதிர்க் கடன் தீர்க்கும் ஆடிமறைமதி வழிபாடுகள்

**தென்புலம் வாழ்நர்க்கு அருங்கடன் இறுக்கும் பொன்போற் புதல்வர்ப் பெறாஅ தீரும்**

ஆதித் தமிழர் மரபிலே முன்னோர் வழிபாடானது மிக முக்கியமான ஒன்றாகும். அந்த வகையில் மறைமதி (அமாவாசை) வழிபாடானது நீத்தாரை நினைந்து வழிபடக்கூடிய சிறப்புமிக்கதாகும். குறிப்பாக வருடம் ஒருமுறை வருகின்ற ஆடித் திங்கள் மறைமதியானது, தந்தையை இழந்தவர்கள் கடைப்பிடிக்க வேண்டிய கட்டாய விரதமாக, எம் மரபில் பார்க்கப்பட்டு வருகின்றது.

ஆடி மறைமதி அன்று, தந்தையை இழந்தவர்கள் விரதமிருந்து, புனித தீர்த்தக் கரைகளில் நீராடி, சிவபெருமானை நினைந்து வழிபடுவது வழமை. இம்முறையும் ஈழத்தில் பெருமளவில் அடியார்கள் அலைமோதி, தீர்த்தக்கரைகள் நிறைந்து வழிந்தது. குறிப்பாக கீரிமலை, மட்டக்களப்பு அமிர்தகழி தீர்த்தக் கரைகளில் அடியார் கூட்டம் பெருந்திரளாக வந்து, தங்கள் தந்தையர்களுக்கு பிதிர் கடன்களை ஆற்றி வழிபட்டனர். ஈழத்து திருச்செந்தூர் என்று போற்றப் படுகின்ற, அம்பாறை திருக்கோவில் அருள்மிகு சித்திவேலாயுதர் திருக்கோயிலில் ஆடிமறைமதியுடன் கூடிய தீர்த்தத் திருவிழாவில், பத்தர்கள் வங்கக்கடலில் வேல்முருகன் வேலுடன் தீர்த்தமாடி நீத்தார் வழிபாடுகளை நிறைவேற்றினார்கள். பெரும்பாலான கோயில்களின் தீர்த்தத் திருவிழா ஆடிமறைமதியுடன் கூடி வருகின்றமையால், இம்மறைமதி நாள் மேலும் சிறப்பாகின்றது.

எனவே சைவர்களாகிய நாம் அனைவரும் இவ்வாறு எம் மரபை பறைசாற்றும், ஆடிமறைமதி போன்ற மரபு வழிபாடுகளை தவறாமல் போற்றி வழிபடுவதோடு, அடுத்த தலைமுறையினருக்கும் எம் வழிபாட்டு முறைகள் கடத்தி, எம்பெருமானின் திருவருள் பெற்று உய்வோமாக.

திருச்சிற்றம்பலம்

# நாவலப்பிட்டி நவநாத சித்தர் சமாதியில் 400 இற்கும் மேற்பட்டோருக்கு சமய தீக்கை



மலையகத்தில் நாவலப்பிட்டித் திருநகரில் நவநாதச் சித்தர்பெருமான் சமாதி விளங்கும் குயின்சு பேரித் தோட்ட சிவன் கோயிலில், கடந்த ஆடித் திங்கள் 13ம் நாள் (29-07-2023) சனிக்கிழமை அன்று, அறநெறிப்பாடசாலை மாணவர், அறநெறி ஆசிரியர், பெற்றோர் அடங்கலாக 400 பேருக்கும் மேற்பட்டோருக்கு சைவசமய தீக்கை வழங்கப்பட்டது. நல்லூர் சிவாகமபீடம் சிவஸ்ரீ கிருஷ்ண ஜனேந்திர சிவாச்சாரியார் அவர்கள் தீக்கையினை வழங்கியருளியிருந்தார். சிவஸ்ரீ கிருஷ்ண ஹரிகரன் ஐயர் (சிவாகம பீடம் - நல்லூர்), சிவஸ்ரீ ந.வர்ணதேவக்குருக்கள் - அச்சுவேலி யாழ்ப்பாணம், சிவஸ்ரீ நா.சிவதர்ஷக்குருக்கள் - நல்லூர் ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டு ஆசிகளை வழங்கியிருந்தனர்.

இந்நிகழ்வை ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபை ஏற்பாட்டில், இலங்கை சைவ நெறிக் கழகத்தினர் நெறிப்படுத்தியிருந்தனர். இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம், அகில இலங்கை இந்து மாமன்றம், சைவ முன்னேற்றச் சங்கம் - பிரித்தானியா, கனடா சைவநெறித் தொண்டர் கழகம், இலங்கை சைவநெறித் தொண்டர் கழகம் ஆகிய அமைப்புகள் துணை உதவியை வழங்கியிருந்தனர்.

இத்தீக்கை நிகழ்வில் சிவபூசை, அனுட்டானப் பயிற்சிகள் வழங்கப்பட்டதோடு, நாவலர்பெருமான் அருளிய நித்திய கரும விதி நூல் மற்றும் சிவபூசை உபகரணங்களும் வழங்கி வைக்கப்பட்டது. மேலும் இலங்கை சைவநெறிக் கழகத்தின் "இல்லங்களில் சிவபூசை செய்வோம்" நூல் வெளியிடப்பட்டு, தீக்கை பெற்றுக்கொள்வோர்களுக்கு வழங்கி வைக்கப்பட்டிருந்தது. கொழும்பு விவேகானந்த சபையினால் வழங்கப்படும் சைவபோதினி நூல்களும், இலங்கை இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் நல்லூர் சிவாகமபீடத்தினால் சைவ அனுட்டானப் புத்தகங்கள் ஆகியனவும் வழங்கி வைக்கப்பட்டிருந்தது.

அன்றையதினம் நவநாதச்சித்தர்பெருமான் சமாதிச் சிவன்கோயிலில், ஆத்மஜோதி முத்தையாசுவாமிகள் சைவசமயத் தொண்டர் சபையினரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மகேசுவர பூசையும் சிறப்பாக இடம்பெற்று, பெருமளவான அடியார்கள் கலந்துகொண்டு வழிபாடாற்றியிருந்தனர்.

திருச்சிற்றம்பலம்

# கொழும்பில் மெய்கண்டார் சைவசமய அறநெறிப் பாடசாலை தொடக்க விழா

கொழும்பில் தமிழ் மாணவர்களிடையே சைவம் தொடர்பான ஈடுபாடு குறைவாக உள்ள நிலையில், இதனை சீரமைக்கும் முகமாக இலங்கை சைவநெறிக் கழகத்தினர், கொழும்பு சொய்சாப்புரம் பகுதியில் அறநெறி ஒன்றை மீளுருவாக்கம் செய்து, "மெய்கண்டார் சைவசமய அறநெறிப் பாடசாலை" என்ற திருப்பெயருடன் தொடங்கி வைத்துள்ளனர். இவ் அறநெறிப் பாடசாலையின் தொடக்க விழாவானது, கடந்த ஆவணித் திங்கள் மூன்றாம் நாள் (20-08-2023) ஞாயிற்றுக்கிழமை அன்று, டி சொய்சா நவோதயா மகா வித்தியாலயத்தில் காலை 9 மணியளவில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் திருமதி. பரமேஸ்வரி கதிர்காமநாதன் அம்மையார், திரு. திருமதி. சின்னத்துரை தனபாலா குடும்பத்தினர் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.



மெய்கண்டார் சைவசமய அறநெறிப் பாடசாலையானது, தொடர்ந்து ஞாயிற்றுக்கிழமைகள் தோறும் தவறாமல், காலை 9 மணி தொடக்கம் 11.30 வரை நடைபெற்று வருகின்றது. இவ் அறநெறிப் பாடசாலையின் தலைமையாசிரியராக சிவஞானச்செல்வர், ஈசான தேசிகர், வைத்தியக் கலாநிதி கி. பிரதாபன் அவர்களும் (சைவநெறிக் கழகத் தலைவர்), பொறுப்பாசிரியராக திருமதி. மெ. செல்வரத்தினம் அம்மையார் அவர்களும், பாடத்திட்டப் பொறுப்பாசிரியர்களாக சித்தாந்தரத்தினம், யாழ்ப்பாணப் பல்கலைகழக சைவசித்தாந்த முதுகலைமாணி சைவத்திரு. ந. சிவபாலகணேசன் ஆயு, சித்தாந்தரத்தினம், திருமுறைநெறிச்செல்வர், சைவப்புலவர், வைத்தியக் கலாநிதி. சிறீ. கார்த்திகைக்குமரன் சரவணமுத்து, திருமுறைநெறிச் செல்வர், சைவப்புலவர், சித்தாந்தரத்தினம் திருமதி. செ.உதயகௌரி ஆகியோரும் இணைந்து செயற்பட்டு வருகின்றனர். மேலும் மெய்கண்டார் சைவசமய அறநெறிப் பாடசாலை தொடக்க விழாவில், சைவநெறிக் கழகத்தால் மெய்கண்டார் அவர்களின் ஓவியப்படமும் வெளியிட்டு வைக்கப்பட்டது சிறப்பம்சமாகும்.

திருச்சிற்றம்பலம்



சிவத்திரு. தென்னவன் பார்த்தீபன்
தலைமை ஆசிரியர் – தென்னாடு,
+6149949 3300, thennavan@thennadu.org



# தீவினையாளருக்கு வாக்களிப்பதும் தீவினையே

**எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு** - (குறள் - 423)

இம்முறை நாங்கள் மக்களின் பண்பாட்டு வளர்ச்சியில் கோயில்களின் வகிபாகம் என்ற கருத்தில் ஆசிரியர் தலைப்புகளை எழுதியிருக்கிறோம். பண்பாட்டு வளர்ச்சியில் கோயில்கள் என்ன செய்யவேண்டும் என்று ஆராயமுன்னர், கோயில்களை நிர்வகிக்கும் நிர்வாகக் குழுக்களும் அதன் தெரிவும் பற்றி சற்றுச் சிந்திப்போம்.

ஈழத்திலும் சரி, புலத்திலும் சரி கோயில்களைக் கட்டி சைவத்தினையும் தமிழையும் வளர்ப்பதில் ஈழத்துத் தமிழர்களின் பங்கு மிகவும் காத்திரமானது. அந்நாளில் மன்னர்கள் ஆக்கி வைத்தனர் ஆலயம் என்பதுபோல் இந்நாளில் உலகெங்கும் பல கோயில்களையும் கட்டியவர்கள் ஈழத்து தமிழர்களே என்பதில் நாங்கள் பெருமைப் படவேண்டும்.

ஆனாலும் அந்தக் கோயில்களில் (எல்லாம் அல்ல), நிர்வாகத்தினர் தெரிவு, அவர்களின் இயக்கம், அவர்கள் செய்யும் மக்கள் தொண்டுகள் மற்றும் சமயப் பணிகள் கேள்விக்குறியாகவே இருக்கிறது. அத்துடன் அவர்களின் சமய அறிவு மற்றும் ஆழம் எந்தளவில் இருக்கிறது என்று எல்லோரும் ஊகித்து அறிவர். அதனால் அவர்கள் கோயிலை இயக்குவதில் முற்றுமுழுதாக அர்ச்சகர்களை (சில) நம்பியிருக்கின்றனர். அர்ச்சகர்கள் சொல்ல அல்லது எழுத அதற்கு கையெழுத்து போடுபவர்களாகவே இருந்து வருகின்றனர்.

அத்துடன் கோயில்கள் உட்பட, அமைப்புகள், சங்கங்கள், இல்லங்கள், பாடசாலைகள், மற்றும் தொண்டு நிறுவனங்கள், ஆரம்பிக்கப்பட்ட நோக்கங்களை மையப்படுத்தி அல்லது அதன்வழி இயங்குகின்றதா என்று யாருமே கவலைப்படுவதில்லை. இப்படியான பலவகையான தூரநோக்கமற்ற சிந்தனை மற்றும் செயல்களால் எங்கள் பண்பாட்டு வளர்ச்சி குன்றுகிறது என்றால் நம்பமுடிகிறதா?

இதில் கவனிக்கவேண்டிய முக்கிய விடயம், தகுதியற்றவர்களை நிர்வாகக்குழுவிற்கு தெரிவுசெய்வதில் மக்கள் மற்றும் அங்கத்தவர்களின் வகிபாகம் என்ன என்பது. வினைக் கொள்கையை நம்பும் சைவர்கள், தீவினையாற்றும் ஒருவரை அல்லது அந்த குழுவில் ஒருவரை தலைவராகவோ அல்லது நிர்வாகக்குழுவிற்கோ தெரிவு செய்வதும் அதற்கு உடன்நிற்பதும் (பதிலாள் வாக்குரிமை கைமாற்றம் – Proxy Voting) தீவினையே. சரியானவர்களை, தகுதியானவர்களை தெரிவு செய்து, அவர்களுக்கு ஆதரவு அளித்து கோயில்கள் மற்றும் நிறுவனங்கள் ஊடாக மொழி மற்றும் பண்பாட்டு வளர்ச்சியை வலுப்படுத்துவதில், நீங்கள் எடுக்கும் முடிவுகளும் மாற்றங்களைக் கொண்டுவரும்.

ஆகவே ஒரு கோயிலுக்கோ, அமைப்பிற்கோ தலைவரை அல்லது நிர்வாக உறுப்பினர்களைத் தெரிவுசெய்யும் போது, துறைசார் திறமை மற்றும் தகுதிகாண் உறுப்பினரை மட்டுமே தெரிவுசெய்யவேண்டும். இது ஒரு வரலாற்றுக் கடமையும் கூட. அதைவிடுத்து மற்றவர்களின் வாக்கை நம்பி, உங்கள் வாக்கை வாடகைக்கு விட்டு, வாயால் வடைசுடும் கொள்கைப்பற்று, சமய அறிவு, சமூக சிந்தனை, பண்பாட்டு வாசனை அற்ற அல்லது குறைந்த ஒருவரை தெரிவு செய்வதும் அதற்கு துணை நிற்பதும் தீவினையே.

**மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.**

# அகவை தொண்ணூறில் கால்பதிக்கும் ந. இரா சென்னியப்பனார் ஐயாவுடன் ஓர் சிறப்பு நேர்காணல்






எழுத்தாக்கம்
பா.மணிபாரதி
MA (AIR – DRAMA ACT)

**தமிழர் வழிபாடு எப்போது தோன்றியது? ஆதியிலிருந்து வந்ததா?**

தமிழ் வழிபாடு என்பது தமிழன் என்று தோன்றினானோ அன்று முதல் உள்ளது. காரணம் தமிழில் கிடைக்கக்கூடிய தொல்காப்பியம் தொட்டே வழங்கி வருகின்றது. தொல்காப்பியத்தில் தான் கடவுள் வாழ்த்து பற்றிய செய்தி வருகின்றது. அத்தோடு "மந்திரம்" என்பதற்கும் தொல்காப்பியம் விளக்கம் தருகின்றது.

**"நிறை மொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
மறை மொழிதானே மந்திரம் என்ப"** (செய்யுளியல் 171)

என்று மந்திரம் பற்றிய செய்தியை தொல்காப்பியம் கூறுகின்றது. பேராசிரியர் அதற்கு உரை வகுக்கும் போது "தமிழ் மந்திரம்" என்றே எழுதுவார். எனவே தொல்காப்பியக் காலத்திலிருந்தே தமிழ் வழிபாடு நடைமுறையில் இருந்தது என்று சொல்லலாம்.

மேலும் தொல்காப்பியம் ஐந்திணைக் கோட்பாட்டை கூறுகின்றது. அத்தோடு ஒவ்வொரு திணைக்கும் வழிபடு தெய்வங்களையும் குறிப்பிடுகின்றார் தொல்காப்பியர். குறிஞ்சி - முருகன், முல்லை - திருமால், மருதம் - இந்திரன், நெய்தல் - வருணன், பாலை - கொற்றவை என வகைப்படுத்தியுள்ளார் தொல்காப்பியர். எடுத்துக்காட்டாக முருகனைப் பற்றி அறிய வேண்டுமென்றால் சங்க இலக்கிய நூலான திருமுருகாற்றுப்படை நூலை எடுத்துக்கொள்ளலாம். அதில் முருகப்பெருமானுடைய ஆறுபடை வீடுகளை நக்கீரன் நயப்படக் கூறுகின்றார்.

**மலைமகள் மகனே! மாற்றோர் கூற்றே!
வெற்றி வெல் போர்க் கொற்றவை சிறுவ!
இழை அணி சிறப்பின் பழையோள் குழவி!
வானோர், வணங்கு வில், தானைத் தலைவ! 260
மாலை மார்ப! நூல் அறி புலவ!
செருவில் ஒருவ! பொரு விறல் மள்ள!
அந்தணர் வெறுக்கை! அறிந்தோர் சொல்மலை!
மங்கையர் கணவ! மைந்தர் ஏறே!**
(திருமுருகாற்றுப்படை - 257-264)

என்றெல்லாம் இறைவனைப் புகழ்ந்து பின்னர் "நின் அளந்து அறிதல் மன் உயிர்க்கு அருமையின்," (திருமுருகாற்றுப்படை - 278) என்று முருகப்பெருமானே உன்னை அளந்து அறிய எங்களால் முடியாது என்று நக்கீரன் பாடுகின்றான். இதை சைவ சித்தாந்தத்தின் வழி பார்க்கும் போது "பாச அறிவில் பசு அறிவில் பற்றற்கரிய பரன்யாவன்" (காரிய சித்திமாலை -8) என்ற பாடல் வாயிலாக அறிய முடிகின்றது.

"அர்ச்சித்தல்" என்ற சொல் முதலில் சங்க இலக்கிய நூலான பரிபாடல் வழி அறிய முடிகின்றது. திருப்பரங்குன்றத்தில் பெண் அர்ச்சிப்பதாக, "என் வயிறு வாய்க்க வேண்டும், மழை பொழிய வேண்டும், அரசன் நல்லாட்சி செய்ய வேண்டும்" என்றெல்லாம் இறைவனை அர்ச்சித்தல் என்ற செய்தியினை அறிய முடிகின்றது.

(04ஆம் பக்கம் பார்க்க)

**முதுபெரும் புலவர்...**

**(03ஆம் பக்கத் தொடர்ச்சி)**

சிலப்பதிகாரத்தில் வேட்டுவ வரியில் பெண்கள் நிகழ்த்தும் வழிபாடு இன்றைய கிராமப்புரங்களில் வழிபடும் பெண் தெய்வ வழிபாட்டை குறிப்பிடுகின்றது. அவ்வாறு இலக்கியத்தில் குறிப்பிடும் கொற்றவை வழிபாடும் தொல்காப்பியர் கூறும் கொற்றவை பற்றிய செய்திகளும் நம் தமிழ் மக்களின் வழிபாட்டுச் சிறப்பினை உணர்த்துகின்றன.

நாயன்மார்களில் கண்ணப்ப நாயனார் இறைவனை எவ்வாறு வழிபட்டிருப்பார். ஐயனே, அப்பனே, சிவபெருமானே என்று தான் வழிபட்டிருப்பார். மந்திரம் எதுவும் சொல்லவில்லை, இது இயல்பு.

மற்றோரு பக்கம் அவினாசிப் பகுதியில், முதலை வாயிலிருந்து பிள்ளையை மீட்டார் சுந்தரமூர்த்தி நாயனார், இதில் நாம் உற்று நோக்க வேண்டியது, அந்தணர் வீட்டு பிள்ளையைத்தான் அவர் மீட்டர், அந்தணர்கள் அனுதினமும் மந்திரம் சொல்லக்கூடியவர்கள். ஆனால் சுந்தரமூர்த்தி நாயனார் திருவாய் மலர்ந்தருளிய, ஏழாம் திருமுறையில் உள்ள 92 வது பதிகத்தில்

**“கரைக்கால் முதலையைப்**
**பிள்ளை தரச்சொல்லு காலனையே”**
(பாடல் 4)

என்று பாடியதுமே பிள்ளை மீட்கப்பட்டான், இதில் ஆதி சைவரான சுந்தரர் பாடிய தமிழ் திருமுறை காலனுக்கே ஆணையிட்டது என்று சொன்னால் அதன் பெருமை வானினும் உயர்ந்தது. இவ்வாறே பழங்காலம் தொட்டு தமிழ் வழிபாடு இருந்து வந்தது.

**தாய் மொழியில் இறைவனை வழிபடுவதன் அவசியம் என்ன?**

மக்கள் தங்களின் மனத்திற்குப் பிடித்தாற் போல இறைவனின் திருப்பெயரைச் சொல்லி வழிபடுதல் மரபாக இருக்கின்றது. ஆனால் இறைவனை தமிழ் மக்கள் வழிபட்ட செய்தியினை ஞானசம்பந்தர்,

**“செந்தமிழர் தெய்வமறை நாவலர்**
**செழுநற்கலை தெரிந்த அவரோடு**
**அந்தமில் குணத்தவர்கள்**
**அர்ச்சனைகள் செய்ய அமர்கின்ற அரனூர்”**
(ஞானசம்பந்தர் தேவாரம்)

என்று தம் பாடலின் வாயிலாக தமிழ் மக்கள் வழிபாட்டை பறைசாற்றுகின்றார்.

**தங்களின் தமிழ் வழிபாட்டு தொடக்க காலம் எது?**

1953ல் பேரூர் தமிழ்க் கல்லூரி ஆரம்பிக் கப்பட்டது. அந்த வகையில் தமிழால் அர்ச்சனை செய்து கல்லூரி தொடங்க வேண்டும், மாணவர் கள் தமிழ் கற்றுப் பயனடைய வேண்டும் என்ற நோக்குடன், தமிழ் கோவைக்கிழார், சுப்பையாக் கவுண்பர் (துணை வேந்தர்), குன்றக்குடி அடிகளார், சி.கே. சுப்பிரமணிய முதலியார், சாந்தலிங்க இராமசாமி அடிகளார் ஆகியோர், பேரூர் பட்டீசுவரர் திருக்கோயிலுக்குச் சென்று தமிழ் அர்ச்சனை மேற்கொண்டு பின் கல்லூ ரி தொடங்கப்பட்டது. அடியேனும் அங்கு தமிழ் பயின்றதால், பல பொறுப்புகளும் வந்தது, எனது வாழ்வும் தமிழென்றானது. இன்றுவரை தமிழ் வழிபாட்டிற்கும், கல்விக்கும் பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன.

கற்பகம் பல்கலைக்கழகத்தில் கூட அதற்கான பயிற்சிகள் வழங்கப்பட்டது. தமிழ் வழிபாடுகள், புதுமனைப் புகுவிழா, குடமுழுக்கு, நீத்தார் வழிபாடு என அனைத்தும் தமிழ் மொழியால்




செய்யப்படுகின்றது. அவ்வாறு செய்யும் போது எளிதில் அடியார்கள் தெளிவுற முடிகின்றது. அதுவே இறைவனுக்கு உகந்ததும் ஆகும்.

**ஆகமம், ஆகம மீறல் பற்றி உங்களது கருத்து?**

ஆகமம் என்பது கிரந்த மொழியில் இருந்து வந்தது. மறைமலை அடிகளார் “மாணிக்கவாசகர் கால ஆராய்ச்சி “ என்று ஒரு நூலை எழுதியுள்ளார். அதில் ‘ஆகமம்’ என்பது அந்தணர்களால் உருவாக்கப்பட்டது என்று குறிப்பிட்டுள்ளார். இவை தமிழ் வடமொழியோடு இயைந்து கிரந்த மொழியால் கூறுவது ஆகும் என்று குறிப்பிட்டுள்ளார்.

**“கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்**
**நற்றாள் தொழாஅர் எனின். “** - குறள்

என்ற குறலுக்கு பரிமேலழகர் உரை வகுக்கும் போது, “ஆகமம் என்பது அவன்தாள் தொழுவது” என்கிறார். எனவே ஆகமம் பின்னாளில் வந்தது. நாயன்மார், நால்வர் பற்றிய செய்திகளெல்லாம் ஆகமத்தில் இல்லை. ஆனால் நாம் வழிபடு கின்றோம், அதனால் ஆகமம் பிற்காலத்தில் வந்தது. பேரூர் புராணத்தில் இறைவனுக்கு அமுது செய்வித்தலிற்கு அளவு முறைகள் கூறப்பட்டுள்ளது. அதே போல் காரமடை ரங்கநாதர் கோயிலில் பந்த சேவை, கருட சேவை போன்ற வழிபாடுகள் எல்லாம் மாசித் திங்களில் நடைபெறுகின்றன. அந்த வகையில் இவை யெல்லாம் ஆகமத்தில் குறிப்பிடாதவை எனவே ஆகமம் என்பது வழிபடுமுறைகளை வகுக்க வில்லை, பிற்காலத்தில் தோன்றிய ஒரு நெறி ஆகும். ‘பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்’ என்பது அடியவர்களுக்கு மட்டுமல்ல ஆண்ட வனுக்கும் தான், அதனையே நாயன்மார்கள் வாழ்வு வழியாலும், வள்ளுவப்பெருமான் வழியாலும் அறிய முடிகின்றது.

**இன்றைய பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் மத்தியில் சமயக்கல்வி எவ்வாறு இருக்கின்றது?**

முற்காலத்தில் புராணங்களும், காப்பியங் களும், சிற்றிலக்கியங்களும் ஒரு பெரும்பகுதியாக கல்விமுறையால் வைக்கப்பட்டிருந்தது, ஆனால் இன்று பெரும்பான்மையான சமய இலக்கியங்கள் இடம்பெறாமல் இருப்பது வருத்தமளிக்கக் கூடிய ஒன்றாக இருக்கின்றது. பேராசிரியர்களும் மாணவர்களுக்கு ஆழமாகக் கற்றுத்தருவதில்லை, அவர்களும் ஆழமாக கற்பதில்லை. தமிழ் படிக்கும் ஆர்வமின்மை இன்றளவில் அதிகமாகக் காணப்படுகின்றது. அவை மாற வேண்டும்.

**சி.கே சுப்பிரமணிய முதலியார் குறித்த அனுபவங்கள்?**

வருமானம் பெறாது தமிழ் கற்றுத் தந்தவர் சி.கே சுப்பிரமணிய முதலியார் அவர்கள், நாவுக்கரசர் வரலாறுகளும், தேவார முறைப் பற்றியும் பல கருத்துக்களை கற்பித்தருளுவார். மனம், புத்தி, சித்தி, அகங்காரம் என்ற நான்கும் ஒரு நிலையாக இருந்ததற்கு, சுந்தரர் இறைவனைக் கண்டு நின்ற செய்திக்கு விளக்கம் கூறும் போது சி. கே. எஸ் அவர்கள் 12ம் எடுத்துக் காட்டும் படியாக,

**“ஐந்துபே றறிவுங் கண்களே கொள்ள**
**அளப்பருங் கரணங்கள் நான்கும்**
**சிந்தையே யாகக் குணமொரு மூன்றும்**
**திருந்துசாத் துவிகமே யாக**
**இந்துவாழ் சடையான் ஆடுமா னந்த**
**வெல்லையில் தனிப்பெருங் கூத்தின்**
**வந்தபே ரின்ப வெள்ளத்துள் திளைத்து**
**மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்”**
- (பெரிய புராணம்)

என்ற பாடலைப் பாடி விவரிப்பார், அவர் அதற்கு உரையும் வகுத்திருக்கின்றார். அத்தோடு நாவுக்கரசர் வரலாற்றையும் மேற்கோள் காட்டிப் பேசுவார், இறுதிவரை இறைப்பற்றோடு வாழ்ந்தவர், எமக்கு கற்றளித்த பேராசிரியர்களில் முதன்மையானவர். இறுதிவரை இலவசக் கல்வியை கற்பித்தவர்.

**முதுபெரும் புலவரான தங்களின் அவா யாது?**

பல கோயில்களுக்கும் சென்று பதிகம் பாட வேண்டும், அதனை மக்கள் பின்னாளில் பாடி வழிபட வேண்டும். அதில் ஒரு தொகுப்பு எமது “சிற்றிலக்கியக் களஞ்சியம்” ஆகும். ஒத்தக்கால் மண்டபத்தில் உள்ள புற்றிடங்குன்றீசுவரன் கோயிலுள்ள ஞானப்பூங்கோதை அம்மைக்கு பலபாடல்கள் பாடியிருக்கின்றேன். எமக்கு இன்னும் பல கோயில்களுக்குப் பாடல்கள் பாட வேண்டும், மக்கள் அதன் மூலம் பயன் பெற்று, ஈடுபாடும் மிகுதியாக வரவேண்டும் என்பதே எனது நோக்கம்.

**திருச்சிற்றம்பலம்**

**செவ்வி கண்டவர் - பா.சிவமாதவன்**



# தென்னாடு

www.thennadu.org

**சிவத்திரு. தென்னாடு நிலவன்**
அடுத்த தலைமுறை ஆசிரியர் – தென்னாடு,
செந்தமிழ் ஆகம சிவமடம் – கொக்குவில்.
+94 (77) 671 6678 | nilavan@thennadu.org



## நான்காம் ஆண்டில் தடம் பதிக்கின்றது ‘தென்னாடு திங்களிதழ்’

இந்திய விண்கலம் சந்திரனில் தடம் பதித்து, தமிழனின் பெருமையை உலகிற்கு பறைசாற்றியுள்ள இந்நேரத்தில், உங்கள் கைகளில் உள்ள எங்கள் தெய்வத்தமிழ் இதழாகிய ‘தென்னாடு இதழும்’ ஐம்பூதநாதர் திருவருளால் முப்பத்து ஆறாவது இதழாக நான்காம் ஆண்டில் தடம் பதிக்கின்றது என்பதை பெருமகிழ்வுடன் உங்களுக்கு அறிவிக்கின்றோம். இவ்வெற்றிப்பயணத்திற்கு உந்துதலாக இருப்பது, எங்கள் தென்னாடு திங்களிதழின் தலைமை ஆசிரியரும், தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடத்தின் நிறுவுனருமான சிவத்திரு. தென்னவன் பார்த்திபன் அவர்களின் அயராத முனைப்பேயாகும்.

சிவபூமியாம் ஈழத்திருநாட்டில் பிறமொழிக் கலப்பின்றி தெய்வத் தமிழிலே ஓர் சைவ இதழை திங்கள்தோறும் தவறாமல் இலவசமாக வெளியிட்டு வருகின்ற பெருமை ‘தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடத்தை’ மட்டுமே சாரும். சீர்வளர்சீர் ஆறுமுகநாவலர் போன்ற ஆற்றலாளர்கள் கட்டி காத்து வந்த, எங்கள் சைவப் பாரம்பரியத்தின் அச்சுப்பணியினை மீண்டும் கட்டியெழுப்பும் முகமாகவே எங்கள் தென்னாட்டின் இப்பணி தொடர்கிறது.

கொரோனா பெருந்தொற்று, பொருளாதார வீழ்ச்சி ஆகிய காரணிகளால் நாட்டின் நிலைமை சீர்குலைந்து, காகித செலவு, அச்சுச் செலவு, வடிவமைப்பு செலவு என்பன அதிகரிக்கப்பட்டு, இதழ்களை அச்சிடுவதில் பெரும் தாக்கத்தை செலுத்தியிருந்தாலும், “சிவசிவ என்கிலர் தீவினையாளர்” என்ற திருமூலர் வாக்கிற்கு ஏற்றால் போல், ஐம்பூதநாதப்பெருமானின் பெருங்கருணையே மூன்று ஆண்டுகளை வெற்றிகொள்ள செய்துள்ளது.

தென்னாடு இதழானது “ஈசனைத் தேடிய தென்னாட்டுப் பயணம்”, “சிவபூமியில் சிவனைத் தேடி”, சித்தர்கள், நாயன்மார்களின் வரலாறு, ஆசிரியர் தலைப்புக்கள் என்பவற்றோடு சைவப் பெரியோர்கள் மற்றும் சைவத்தமிழை பறைசாற்றும் நிகழ்வுகளையும் தவறாமல் ஆவணப்படுத்தி, ஓர் ஆவணப்படுத்தல் கையேடாகவே வெளிவந்து கொண்டிருக்கின்றது. குறிப்பாக மாணவர்களிடையே சைவம் பற்றிய ஆழமான கருத்துக்களை பதிப்பிப்பதோடு, பேராசிரியர்கள் முதல் மாணவர்கள் வரையாக, அடுத்த தலைமுறை ஆசிரியர்களிற்கும் வாய்ப்பளித்து ஊக்கப்படுத்தியும் வருகின்றது. தொடர்ந்து ஆக்கவியலாளர்களுக்கு வாய்ப்பளிக்க காத்துக் கொண்டும் இருக்கின்றது.

எங்கள் தென்னாடு இதழின் அடுத்த கட்ட நகர்வாக, கடந்த முப்பத்து ஐந்தாவது இதழ் தொடக்கம், புலம்பெயர் தேசங்களிலும் சைவத்தின் தொன்மையையும் சிறப்பையும் கொண்டு செல்லும் நோக்கில், நான்கு பக்கங்களில் ஆங்கில கட்டுரைகளைத் தாங்கி, பதினாறு பக்க நிற வர்ண அச்சு இதழாக வெளியிடப் பெற்று வருகின்றது. இச்செயற்படானது புலம்பெயர் தமிழ் மாணவர்களிற்கு மிகுந்த பயனுள்ளதாக அமைகின்ற வேளையில், வெளிநாட்டவர்களுக்கு எம் ஆதித் தொன்மை வரலாற்றை எடுத்துச் சொல்வதாகவும் அமைகின்றது.

‘நூல்களை கொள்வனவு செய்வது செலவல்ல, சேமிப்பு’ என்பது அறிஞர்களின் கூற்று. அத்தகைய உங்கள் அறிவுத் தேடலுக்கான சேமிப்பை, தென்னாடு இறைபரிசாக, இலவசமாகத் தருகின்றது. எனவே “நற்றவத்தவர் உள்ளிருந்தோங்கும் நமச்சிவாயத்தை நான் மறவேனே “ என்ற வள்ளலார் பெருமானின் வரிகளை நினைவில் கொண்டு, தெய்வத்தமிழானது தூய வடிவில் துலங்கப்பெற்று, உங்கள் கைகளுக்கு கிடைக்கப் பெறுகின்ற தென்னாடு இதழைப் படியுங்கள், பரப்புங்கள், போற்றி வழிபாடும் செய்யுங்கள் – ஓம் நமசிவாய.

மேலும் யாழ்ப்பாணம், கொழும்பு, திருகோணமலை, மட்டக்களப்பு, பதுளை, இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களிலுள்ள தமிழ் பாடசாலைகள், நூலகங்களிற்கு இலவச அச்சு இதழாக திங்கள்தோறும் தவறாமல் அனுப்பி வைக்கப்படுகின்றது. ஏனைய மாவட்டங்களிலும் தென்னாடு இதழை பெற்றுக்கொள்ள விரும்புபவர்கள், பாடசாலைகள், நூலகங்களிற்கு விநியோகிக்கக்கூடியவர்கள் தென்னாட்டை தொடர்பு கொள்ளலாம். அத்தோடு மின்னிதழாகவும் பலரிடையே திங்கள்தோறும் பகிரப்பட்டு வருகின்றது. நீங்களும் திங்கள்தோறும் தென்னாடு மின்னிதழ்களை தவறாமல் பெற்றுக்கொள்ள வேண்டுமாயின், இவ் இதழின் முதலாம் பக்கத்தில் வலது பக்க மேல் மூலையில் குறிப்பிடப்பட்டுள்ள இணைப்பு முறையை பயன்படுத்தி பெற்றுக்கொள்ளலாம் என்பதையும் பெருமகிழ்வோடு அறிவிக்கின்றோம்.

திருச்சிற்றம்பலம்

## தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல் – கேட்போம் தெளிவோம்



சிவஞானச் செல்வர். மருத்துவர் ஈசான பிரதாபன் தேசிகர்

**இல்லறத்தில் இருந்தவாறே ஆதீன குருமகாசந்நிதானமாக இருக்கலாமா?**

ஓம். இருக்கலாம். தமிழ்நாட்டில் விளங்கிவரும் வேளாக் குறிச்சி ஆதீனம், கூனம்பட்டி ஆதீனம், துழாவூர் ஆதீனம் முதலியன இல்லற ஆதீனங்களேயாகும். தருமபுர ஆதீனத்தினைத் தோற்றுவித்தவர் குருஞானசம்பந்தர் என்னும் சிவஞானியாவார். குருஞானசம்பந்தருக்கு குருவாக விளங்கியவர் கமலை ஞானப்பிரகாசர். கமலை ஞானப்பிரகாசர் இல்லறத்தில் விளங்கிய சிவஞானியாவார்.

**இராவணன் பற்றி உங்கள் கருத்து என்ன?**

திருஞானசம்பந்தப் பெருமானினைவிட உயர்ந்த ஒருவர் சைவத்தில் இருக்க முடியுமா? திருஞானசம்பந்தப் பெருமானின் திருவடி பட்ட நிலத்தில் உள்ள மண்ணுக்கு நம்போன்றோர் ஈடாகுவோமா? மாட்டோம்! மாட்டோம்! எனவே, அப்பெருமானார் கூறிய கருத்தே சைவசமயத்தார் தம்தலையில் சூடிப் போற்றுவதற்குரியதாகும். ஏனையோர் கருத்தெல்லாம் உலகியல் தேவைபொருட்டு உதிர்ப்பன என்று கைகழுவத்தக்கனவாம்.

திருஞானசம்பந்தப்பெருமான் சைவசமயத்தினை மீளத்தாபிக்கவேண்டும் என்னும் தேவையேற்பட்டபோது, அருளிச்செய்த திருப்பதிகம் ‘‘மந்திரமாவது நீறு’’ பதிகமாகும். இப்பதிகத்தில் ‘‘இராவணன் மேலது நீறு’’ என்று அருளிச்செய்துள்ளார். இதுவொன்றே இராவணனின் சிவபத்தித்திறம் சைவத்தில் கொண்டாடப்படும் திறத்தினை விளக்கமுறச்செய்ய்யும்.

உயர்ந்ததன் மேற்றே உள்ளுங் காலை என்பது உவமையினைக் கையாளும்போது கைக்கொள்ளவேண்டிய விதியாகத் தொல்காப்பியம் கூறும் விதியாகும். அதாவது உயர்ந்த பொருளினையே உவமையாகக் கையாள்வது கற்றோர் கடன். உதாரணத்திற்கு, சந்திரனைப் பார்த்து நாய் குரைத்ததுபோல் என்ற உவமையினைக் கற்றோர் மற்றோர்பால் கூறமாட்டார்கள். ஒருவரின் வீரத்தினை வர்ணிக்கவேண்டுமானால், சிங்கம்போல் வீரம் உடையவன் என்றுதான் கூறுவர். தாழ்வான விலங்குகளினை உதாரணமாகக் கைக்கொள்ளமாட்டார்கள்.

திருநீற்றின் புகழினைப் பறைசாற்றுவதற்கு திருஞானசம்பந்தப் பெருமான் இராவணன் மேலது நீறு என்று அருளிச்செய்திருப்பது,அதாவது, இராவணன் பூசிப் பயன் பெற்றது என்று அருளிச்செய்திருப்பதினால் இராவணனின் சிவபத்தி சைவசமயத்தாரினால் கொண்டாடப்படத்தக்கதே என்பது தெளிவாகும்.

பொது அறம் சிவ அறம் என்று இருவேறு அறம் உண்டென்பது சிவாகம விடயம். திருஞானசம்பந்தர் இராவணனைக் கண்டிப்பது இருதிறத்தில். ஒன்று பொது அறத்தில் பிறழ்ந்தது. மற்றையது, கயிலையினை அசைக்க முயற்சி செய்தது. இரண்டாவது சிவ அபராதம். இராமேச்சுவரப் பதிகம் முதலியவற்றில் பொது அறத்தில் பிறழ்ந்ததினைக் கண்டிக்கின்றார். பல்வேறு பதிகங்களில் சிவ அபராதத்தினைக் கண்டிக்கின்றார். எனினும் இராவணன் சிவ அறத்தில் தாம் நழுவியதினை சிந்தித்து வருந்தி, சிவபெருமானே இன்புறும்வகையில் சாமகானம் இசைத்து, அதுவும் தன் பத்துத் தலைகளில் ஒன்றினையும் கை ஒன்றினையும் ஒடித்து வீணை செய்து இசைத்து சிவ அறத்தில் உயர்ந்தான் என்பதுதான் சைவமுடிவு. ”அரக்கன் ஆற்றல் அழித்தருளாக்கிய ஆக்கமே” என்று திருப்பூந்தராய் திருத்தலப் பதிகத்தில் திருஞானசம்பந்தப்பெருமான் அருளிச்செய்தமையினால் விளக்கமுறும்.

பல்வேறு இராமாயணக் கதைகள் உண்டு. துளதிதாசர் இராமாயணம் கம்ப இராமாயணம் என்று இராமாயண பேதங்கள் ஏராளம். அதுபோல், புராணங்களும் ஏராளம். சைவசமயத்தார் நூல்களுக்கிடையேயான வன்மை மென்மை அறிந்தே நூல்களினைப் பொருள் கொள்ளவேண்டும் என்பது சைவாமவிதி. சிவாகமங்களின்படி சிவாகமங்களே பரநூல்களாகும். ஏனையவை யாவும் அபர நூல்கள் எனப்படும். எனவே, சிவாகமத்தின் ஞானகாண்டம் என்று போற்றப்படும் பன்னிருதிருமுறைகளே, சைவசமயத்தாரின் அதியுச்ச அளவை நூல்களாகும். ‘‘எனதுரை தனதுரை’’ என்று சிவவாக்கே தம்வாக்கென்று திருஞானசம்பந்தப்பெருமான் அருளிச்செய்திருப்பதும் நாம் சிந்தித்து உய்யவேண்டியதாகும். எனவே, திருமுறைகளிற்கு முரணாக ஏதேனுஞ் செய்தி, திருமுறைகள் கூறும் பொருளினைச் சிதைக்குமாறு ஏதேனும் கதைகள் புராணத்தில் இருந்தால், அவையெல்லாம் தள்ளத்தக்கன என்று கொள்வதே சைவர் கடன். புராணங்களில் இராவணனின் சிவபத்தியினைப் பழிக்குமாறு ஏதேனுஞ் செய்தியிருந்தால், அதனையேற்று திருமுறை கூறுஞ் செய்தியினை ஒருவர் நிராகரிப்பரேயானால், அந்தகையார் திருமுறையினைப் பழித்தவரேயாவார். திருமுறை நிந்தனையும் சிவ நிந்தனையும் ஒன்றேயாகும்.

இராவண குறித்து இன்று வாதிப்போர் அனைவரும் தம்மைச் சைவர் என்று ஏதேனும் ஓர்வழியில் கூறிக்கொண்டு, நெற்றியில் திருநீறு அணிந்து உய்வுபெறும் வாழ்வு பெற்றதே, திருஞானசம்பந்தப்பெருமான் சைவசமய மீள்தாபனஞ் செய்தமையின் பலனாலேயாகும். அங்ஙனமான சைவ தாபனம் பாண்டியனின் வெப்பு நோயினை நீங்கியமையிலேயே வீறுகொண்டது என்பதினையும், அதற்கு மந்திரமாவது நீறு என்ற திருநீற்றுப்பதிகமே காரணம் என்பதினையும், அப்பதிகத்தில் திருநீற்றின் சிறப்பு இராவணனைக் கொண்டே தாபிக்கப்படுவதினையும் நல்லோர் உணர்ந்து தெளிக!

தென்னாடு
செந்தமிழாகம சிவமடம், கொக்குவில், யாழ்ப்பாணம். www.thennadu.org



சிவத்திரு. சிவ. செந்தமிழாதன்,
ஆசிரியர் – தென்னாடு,
செந்தமிழ் ஆகம சிவமடம் – கொக்குவில்.
0715588737, aathan@thennadu.org

## தென்னாடு வாழியவே

தென்னாடு இதழ் தன் மூன்றாவது ஆண்டை நிறைவு செய்திருக்கின்றது. முப்பத்தாறு பத்திரிக்கைகள் சைவத் தமிழ் செய்திகளோடும், நாம் அனைவரும் சிவத்தை அறியும் பொருட்டும், வெளிவந்திருக்கின்றது. இலங்கைத் திருநாட்டில் தனித் தமிழில் இலவச இதழாக சிவ அடியார்களுக்காக வெளிவரும் ஒரே ஒரு இதழ் தென்னாடு மட்டும் தான் என்பது பெருமைப்பட வேண்டியதைத் தாண்டி, இறை அருளால் இது சாத்தியமானது என நாம் இறைவனின் பெருங்கருணையை எண்ணி உருகி நிற்கின்றோம்.

மூன்றாண்டுப் பயணம், பத்திரிக்கைப் பணியில் இளையவர்களை பக்குவப்படுத்தி இருக்கின்றது. பன்னாட்டுத் தமிழ்சிறார்களும் சைவத்தை அறியவும், பிறமொழி பேசும் வேற்று இனத்தாரும் சிவத்தை அறியவும், கடந்த இதழில் இருந்து ஆங்கில மொழி மூலமான பகுதியையும் தென்னாடு தன்னகத்தே உள்வாங்கியிருக்கின்றது. ஒவ்வொரு நிறைமதி நாளிலும், சான்றோர்களும், கல்விப் புலமையாளர்களும் கூடி வெளியிடும் தென்னாடு திங்கள் இதழ் இளையவர்களுக்கு, எமது சமயம் நோக்கிய தவறான புரிதல்களை நீக்கி தத்துவார்த்தமான மெய்யியல் இது தான் என்கின்ற செய்தியை உரக்கச் சொல்கின்றது.

என்னைப் பொறுத்தவரையில் இந்த முப்பத்தாறாவது இதழ் மிக முக்கியமான தடம். சைவ சித்தாந்தம் கூறுகின்ற தத்துவங்கள் முப்பத்தாறு. வளம்மிக்க தத்துவச் செறிவு கொண்ட மெய்யியலான சைவசித்தாந்தம் பிற சமயக்கத்துக்களை நிராகரிக்கவும், தன் கொள்கைகளை அழுத்தமாகச் சொல்லி முடிந்த முடிவாகவும், தனக்கு மேல் இனிவிரிவு இல்லை என தன்னை நிறுவுவதற்கு துணை நிற்பவை தான் சிவதத்துவம், வித்தியா தத்துவம், ஆன்மதத்துவம் என வகைப்படுத்தப்படும் முப்பத்தாறு தத்துவங்களாகும். இவ்வாறே தென்னாடு தன் முப்பத்தாறு இதழ்களையும் இக்காலத்துக்கு ஏற்றவகையில், பிற சமய ஆதிக்க நிலைப்பாடுகளில் இருந்தும், திட்டமிடப்பட்ட மதமாற்றங்களில் இருந்தும் எம் மக்கள் தம்மைத்தாமே தற்காத்துக்கொள்ள வேண்டிய வகையில் எழுத்துப் பணியாக வெளியிட்டிருக்கின்றது.

இலத்திரனியலும் சமூக வலைத்தள ஆதிக்கமும் வெகுவாக உள்ள இக்காலத்தில் வாசிப்பை நோக்கி இளையவர்களை மீண்டும் திசைமுகப்படுத்துவது தான் தென்னாட்டின் குறிக்கோள். அதே நேரம் சைவசமயக் கருத்துக்களை அறிவு சார்ந்த வகையில் சிந்தித்து ஆய்வு நோக்கில் அவற்றைக் கண்டு, அவை சொல்லும் உட்பொருளை அறிந்து உய்யும் வகையிலும் இளைய சைவத் தமிழ் பிள்ளைகளை தூண்டுவதும் தென்னாட்டின் வலுவான கொள்கையாகும். இக் கொள்கைகளை செயற்பாட்டு அடிப்படையில் நடைமுறைப்படுத்த பாடசாலை மட்டங்களிலும் அறநெறி வகுப்புகளிலும் இருக்கின்ற இளைய பிள்ளைகளுக்கு தென்னாடு இதழை சேர்ப்பிப்பது சைவத் தமிழர்கள் அனைவரதும் கடமையாகும்.

சீர்வளர்சீர் ஆறுமுகநாவலர் பெருமான் மேற்கொண்ட அச்சுப் பணி நாம் எல்லோரும் வியந்து பார்க்கும் அளவுக்கு அளப்பெரியது. நவீன சாதனங்கள் எவையும் இன்றி, வலைத்தள உதவியின்றி, ஆழ்ந்த புலமையை மட்டுமே ஆதாரமாக கொண்டு அவர் ஆற்றிய அச்சுப்பணியை முன்னோடியாகக் கொண்டே தென்னாடு தன்முனைப்பான பணியை இன்று முன்னெடுக்கின்றது. வர்ணப் பக்கங்களோடு, ஈழத்து எழுத்தாளர்கள் மட்டுமன்றி மற்றும் தமிழகம் உட்பட்ட பன்னாட்டு எழுத்தாளர்களின் ஆக்கங்களைத் தாங்கி வெளிவரும் தென்னாடு மாத இதழ் இன்னும் பல்லாண்டுகள் பயணிக்க வேண்டியது காலத்தின் தேவையாகும். அதன் பயணத்தில் வாசகர்களாகிய உங்களின் வகிபங்கும் என்றும் இருக்கும்.

இளைய எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் முகமாக பாடசாலை மாணவர்களின் ஆக்கங்களுக்கும் தென்னாடு களம் அமைத்துக் கொடுக்க முன்னிற்கின்றது. தூய தமிழில், சைவத்தின் பெருமைகளை ஆய்ந்து எழுதும் புலமைத்தும் மிக்க மாணவ சமுதாயத்தை உருவாக்க வேண்டிய அவசியத்தை நாம் உணர வேண்டும். சமயப் பத்திரிக்கை என்பதைத் தாண்டி சமூக அடிக்கட்டுமானங்களை வளம் செய்ய தக்க வகையில் ஆற்றல் கொண்ட மாணவ சமுதாயத்தை உருவாக்கும் பத்திரிக்கையாகவும் தென்னாடு எதிர்காலத்தில் மிளிரும் என்பது உறுதி.

முப்பத்தாறு வெளியீடுகளை எட்டியிருக்கும் தென்னாடு திங்கள் இதழின் அடைவில் பெரும் பங்கு கொண்டுள்ள தென்னாடு செந்தமிழாகம சிவமடத்தின் நிறுவுனரும், தென்னாடு பத்திரிக்கையின் தலைமை ஆசிரியருமான, சிவத்திரு தென்னவன் பார்த்திபன் அவர்களின் திட்டமிடல்களோடு கூடிய எதிர்கால அடைவுகளுக்கு திருவருளும் குருவருளும் கிட்ட நாம் எல்லோரும் இறைவனை ஒருசேர வணங்குவோம்.

**தென்னகத்து மெய்நெறியின்,**
**தேனமுத ஞானவொளி பரப்ப,**
**என்னகத்தும் புறத்தும் எங்கும்,**
**இருக்கின்ற ஈசனருளால்,**
**வண்ணவடிவாய் முப்பத்தாறு,**
**இதழ் நிறையும் ஏற்றமிகு,**
**'தென்னாடு' என்றென்றும் வாழியவே!**

**திருச்சிற்றம்பலம்**

தென்னாடு
செந்தமிழாகம சிவமடம், கொக்குவில், யாழ்ப்பாணம். www.thennadu.org



சிவத்திரு.யாழவன் சிவவேதன்,
அடுத்த தலைமுறை ஆசிரியர் – தென்னாடு,
செந்தமிழ் ஆகம சிவமடம் – கொக்குவில்.
+94 (70) 770 1111, sivavethan@thennadu.org

## மறுக்கப்படுகிறதா திருப்புகழ்?

சைவ சமய பத்தி இலக்கியங்களின் வரிசையில் தனக்கென்று தனியானதொரு இடங்கொண்ட இலக்கியம் திருப்புகழ் என்றால் அதில் எந்தவொரு மிகைப்படுத்தலும் இல்லை. செந்தமிழ் பொலியும், திருமுறையைப் பாடி இறைவனை வழிபடும் பொழுது, நிறைவாக திருப்புகழ் பாடி நிறைவு செய்யும் மரபை பல நாட்களாகச் சைவர்கள் கைக்கொண்டு வந்துள்ளார்கள். அந்தவகையிலே திருப்புகழானது திருமுறைக்கு இணையாக, திருமுறையுடன் பயிலப்பட்டு வந்த மரபு தற்காலத்திலே சில, பல இடங்களில் சிதைவது தமிழர்களின் தீவினைப்பயன்.

திருப்புகழும் திருமுறையை ஒத்த பதிவாக்கு என்பதை கற்றறிந்த சான்றோர்கள் சிலரும் ஏற்க மறுக்கின்றார்கள் என்பது மிக வேதனையான விடயம். எவ்வாறு சுந்தரமூர்த்தி நாயனாரை இறைவன் தடுத்தாட் கொண்டு, "பித்தா " என அடியெடுத்துக் கொடுத்து, செந்தமிழ் பாடுக என்று சொன்னானோ, அதே போலத்தான் அருணகிரிநாதரை ஆட்கொண்டு "முத்தைத்தரு" என அடியெடுத்துக் கொடுத்தான். அந்தச் சிவனுக்கும் இந்த முருகனுக்கும் பேதம் கற்பித்து திருமுறை வேறு, திருப்புகழ் வேறு என உரைக்கும் மூடர்கள் மாணிக்கவாசகர் சொல்வது போல முத்திநெறி அறியாத மூர்க்கர்கள் ஆவர்.

திருமுறைகளுக்கு நிகரான ஆராய்ச்சி திருப்புகழின் கண் நிகழ்ந்ததா என்றால் இல்லை. திருமுறைகளை போற்றுகின்ற அளவு திருப்புகழை போற்றுகின்றோமோ என்றால் அதுவுமில்லை. இன்னும் ஒருபடி மேற்சென்று, திருமுறைகளோடு சேர்த்துப்பாடப்பட்ட திருப்புகழ் இன்று சில இடங்களிலே நீக்கப்பட்டும் விட்டது. இவ் இழிவான செயற்பாட்டைச் செய்யும் நபர்களுக்கு சிவபெருமான் எப்போதும், "புறந்தார்க்கு சேயோனாகத்" தான் காட்சியளிப்பார்.

**"சினத்தவர் முடிக்கும் பகைத்தவர் குடிக்குஞ்**
**செகுத்தவர் ருயிர்க்குஞ் சினமாகச்**
**சிரிப்பவர் தமக்கும் பழிப்பவர் தமக்கும்**
**திருப்புகழ் நெருப்பென் றறிவோம்யாம்"**

என்பவை அருணகிரிநாதரின் வரிகள். பகைத்தவரை மாத்திரமில்லாது, பகைத்தவரின் குடியையே எரித்தொழிக்கும் வல்லமை வாய்ந்தது திருப்புகழ். அப்படிப்பட்ட திருப்புகழை வெறுப்பது அறிவு சார்ந்ததா? அல்லது,

**"நினைத்தது மளிக்கும் மனத்தையு முருக்கும்**
**நிசிக்கரு வறுக்கும் பிறவாமல்"**

என்று அருணகிரிநாதர் சொன்ன திருப்புகழைப் போற்றுவது அறிவு சார்ந்ததா? தமிழ்கூறும் சைவ உலகம் தான் இதைத் தீர்மானிக்க வேண்டும். இதை நினைத்து இந்தத் திருப்புகழ் என்றில்லை, எதை நினைத்து எந்தத் திருப்புகழைப் பாடினாலும் எண்ணியது எண்ணியவாறு கிட்டும். இது அருணகிரிநாதரின் ஆணை. சைவ உலகம் விழித்து எழ வேண்டும். திருப்புகழ் திருமுறைக்கு நிகராய் போற்றப்படல் வேண்டும். முருகன் மறுக்கப்படும் இடத்தில் தமிழ் இருப்பதில்லை, தமிழில்லாத நிலையில் சைவம் இனிப்பதில்லை. சைவம் இனிக்கத் தமிழ் வேண்டும், தமிழ் வேண்டுமெனின் முருகன் வேண்டும்.

**"நிறைபுகழ் உரைக்கும் செயல் தாராய் "**

**திருச்சிற்றம்பலம்**

# தென்கயிலை ஆதீனம் குருமகாசந்நிதானம் அகத்தியர் சுவாமிகளின் மணிவிழா



இலங்கை, தென்கயிலை ஆதீன முதலாம் குருமுதல்வர் தவத்திரு. அகத்தியர் அடிகளார் அவர்களின் அறுபதாவது அகவை நாள் சிறப்பு நிகழ்வானது கடந்த ஆடித் திங்கள் 21ம் நாள் (06-08-2023) ஞாயிறுக்கிழமை காலை 10.30 மணியளவில் திருகோணமலை தென்கயிலை ஆதீனத்தில் வட - கிழக்கின் சைவ அமைப்புக் களின் ஏற்பாட்டில் சிறப்பாக இடம்பெற்றது. இந்நிகழ்வில் வடகிழக்கை சேர்ந்த சைவ அமைப்புகளின் பெரியோர்கள் பலரும் கலந்து கொண்டு சிறப்பித்திருந்தனர்.

### அறுபதாவது அகவையில் அடிகளாரின் சிவவாழ்வின் சில பதிவுகள்

தவத்திரு. அகத்தியர் அடிகளார், சிவத்திரு தில்லையம்பலம் வள்ளியம்மை தம்பதிகளின் புதல்வராக 29-07- 1963 சிவபூமியில் தமிழ் மண்ணில் பிறந்தார். இவருக்கு பெற்றோர் இட்ட பிள்ளைத்திருநாமம் தில்லைக்குமரன். அடிகளார் அவர்கள் தனது கல்வி காலத்தை திருகோணமலை கோணேசுவரா இந்துக் கல்லூரியில் கழித்தார்.

இவர் இளம் வயதில் இசை ஈடுபாடு கொண்டிருந்ததால், சுவாமி விபுலானந்தரரின் யாழ் நூல் இசைத்தேடலில் பங்களித்த பல மாணக்கர்களை உருவாக்கிய, இசை அறிஞரான தந்தையாரின் இசை ஞானம் அடிகளாரிற்கும் இள வயதிலேயே வாய்த்திருந்தது. இவர் 1982இல் தனது சேவையை ஆசிரியப்பணியில் தொடங்கினார். இவரது முதல் நியமனம் மூதூரின் சேனையூர் தமிழ் மகா வித்தியாலயம் ஆகும். இந்நாளில் ஆன்மீகம் நோக்கிய தேடலால் சுவாமி விவேகானந்தரின் சிந்தைகளிலே




அவரின் உன்னத கருணை உள்ளத்திலே அதீத ஈடுபாடு கொண்டார்.

1992ம் ஆண்டு ஆசிரியப் பணி விருப்ப ஓய்வு பெற்று, ஆன்மீக தேடலில் உருகிய அடிகளாரை, இறை சிவன் தன் அருள் மாமலையான திருவண்ணாமலைக்கு அழைத்தான். அண்ணமாலையாரின் திருவருளால் துறவியாக சிவபூமி ஈழம் மீண்ட அடிகளார், திருகோணமலையில் தன் ஆன்மீக பணிகளை நோக்கி, 1998ம் ஆண்டு சீடனுடன் கன்னியா பீலியடி சிவன் மலையிலே குடில் அமைத்து தவ வாழ்வை தொடங்கினார்.

2013ம் ஆண்டு அகில இலங்கை சைவ மகா சபையினர் வேண்டுகோளிற்கிணங்க, தேவாரப் பாடல் பெற்ற ஈழத்தின் இருபெரும் தலைமைத் திருக்கோயில்களில் ஒன்றான, திருக்கோணேச் சரத்தை குறிக்கும் தென் கயிலையிலையை ஆதீன நாமமாகவும், இசை வித்துவானாகிய அடிகளார் திருகோணமலை மண்ணோடும் தமிழோடும் சைவத்தோடும் நீக்கமற நிறைந்த ஆதி சிவனின் அருள் மைந்தன் அகத்தியரின் பெயரையே ஆதீன குருமுதல்வர் பரம்பரை முதல் நாமமாகவும் ஏற்றார். அன்று முதல் தூய தமிழ்ச்சைவ திருக்கையிலாய நந்தி சைவசித்தாந்த மரபு ஆதீனம் ஈழத்தின் கிழக்கில் தொடக்கமானது. முதல் குருமுதல்வராக அகத்தியர் அடிகளார் அருளாட்சி ஏற்றார்.

### தென்கயிலை ஆதீன குருமுதல்வர் அகத்தியர் அடிகளாரின் சிவப்பணி முன்னெடுப்புகள்

கன்னியா வெந்நீருற்றில் சிவலிங்கத்திற்கு பத்து வருட இடைவெளியின் பின் சீடருடன் இணைந்து பல இடர்பாடு மத்தியில் பூசைகளை மீள ஆரம்பித்தார்.

2014 - வவுனியா கோயிற்குளம் சைவ இளைஞர் மாநாட்டிற்கு அருட் தலைமை ஏற்றார். வட கிழக்கின் சைவ அமைப்புகளை ஒருங்கிணைக்கும் தீர்மானம் அடிகளார் தலைமையில் மேற்கொள்ளப்பட்டது.

2015 - அடிகளார் தலைமையில் சீடரும் சைவ மகா சபையினரும் தமிழ்நாடு சிவத்தல யாத்திரை செய்ததோடு ஆதீனங்களிற்கும் வருகை மேற்கொண்டனர்.

சீடர் திருவண்ணாமலையில் திருமூல தம்பிரான் எனும் தீக்கைத் திருநாமத்துடன் இளைய பட்டமாக துறவு ஏற்றார்.

2017 - அகில இலங்கை சைவ மகா சபையின் தலைமை பதவியை ஏற்றார். அடிகளாரின் ஈராண்டு தலைமை காலத்தில் சைவ இளைஞர் மாநாடு யாழில் பிரமாண்ட எழுச்சி பேரணியோடு இடம்பெற்றது. இந்நிகழ்வில் தமிழ்நாடு பேரூர் ஆதீனம் அப்போதைய வடக்கின் முதலமைச்சர் உள்ளிட்ட பல ஆன்மீக அரசியல் தலைவர் பங்கேற்றனர். மாநாட்டு தீர்மானமாக சைவ மகா சபையால் சைவ அறப்பணி நிதியமும் சிவபிராந்தியம் எங்கெனும் சிவதொண்டர் சிவ மங்கையர் கட்டமைப்புக்களும் தோற்றுவிக்கப்பட்டன.

2018 - மீள் புதுப்பிக்கப்பட்ட கீரிமலை மெய்கண்டார் ஆதீன தம்பிரானாக பொறுப்பு வகிக்க இளைய பட்டம் திருமூல தம்பிரானை பணித்தார்.

2019 - உமாபதி சிவம் அடிகளாரை மெய் கண்டார் ஆதீன குருமுதல்வராக திருநிலைப் படுத்தினார்

2020 - மாங்குளத்தில் சிவஞானசித்தர் வளாகத்தில் சிவபெருமான் திருப்படிமம் அடிகளாரின் தலைமையில் தெய்வத்தமிழில் குடமுழுக்கு கண்டது

தென் கயிலை ஆதீனத்தின் சிவன் மலையில் எங்கெங்கும் பல நூறு சிவலிங்கங்களை நிறுவி, நிறைமதி தோறும் தெய்வத்தமிழிலில் வேள்விகள் நடத்தினார்.

2022 - மலையகத்தில் ஆதீனம் இல்லா குறையை, தமிழ்ச்சைவப்பேரவை, சைவ மகா சபை ஒருங்கிணைப்பில் நுவெரெலியாவில் திருநாவுக்கரசர் ஆதீனமாக திருஞானசோதி அடிகளாரை திருநிலைப்படுத்தினார்.

மேலும் இவர் 2000 தொடக்கம் இன்று வரையான காலப்பகுதியில், பல இசை நாட்டிய நாடகங்களை எழுதி நெறியாள்கை செய்து திருகோணமலை, யாழ்ப்பாணம், கொழும்பு, மலேசியா, சிங்கப்பூர் என இலங்கையிலும் கடல் கடந்தும் அரங்கேற்றியுள்ளார். மற்றும் பல அறநெறிப்பாடசாலைகளை அறப்பணி செயற்றிட்டங்களை முன்னின்று தொடக்கி தொடர்ந்து வழிநடாத்தி வருகின்றார். தமிழ் சைவ தேசிய அடையாளங்களை மரபுரிமைகளை பாதுகாக்க குரல் கொடுத்து வருவதோடு, போராட்டங்களில் தலைமை கலந்தாய்வுகளிலும் பலவாறு பங்கேற்று வருகின்றார்.

காலத்திற்கு காலம் எம்மை வழிநடாத்துவதற்கு எம்பெருமான் அருளாளர்களை தோற்றுவிக் கிறான். அவ்வாறு எம்காலத்தில் எமக்கு கிடைத்த அரும்பெரும் ஆதனமே, எங்கள் தவப்பெரும் அகத்தியர் அடிகளார். மணி விழா காணும் அப்பெருமகனாரை போற்றி வணங்குவதோடு, அவர் வழி நின்று வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து உய்வோமாக.

திருச்சிற்றம்பலம்

# சைவத்தை அறிமின் சிவத்தை அறிமின்



**சொல்லுலகத்திலுள்ள மந்திரம், பதம், வன்னம் என்பவற்றின் பொருள் என்ன?**

மந்திரம் என்பது எழுத்துகளாலான ஒரு தொடர் அல்லது சொல். 'நமசிவய' என்ற மந்திரம் ஐந்தெழுத்துக் களாலான ஒரு சொல். பதம் என்பது சொல்லின்பொருளைக் கொண்டது, 'நமசிவய' என்பதில் திரோதானம், மலம், சிவன், அருள், உயிர் ஆகிய பொருள்கள் உள்ளன. இதனால் இவை பதம் எனப்படும். 'அந்தியும் நண்பகலும் அஞ்சுபதம் சொல்லி', என்ற திருமுறைத் தொடர் இதனைக் குறிப்பதாக உள்ளது. வன்னம் என்பது சொல்லிலுள்ள எழுத்து. நமசிவய என்பதில் ஐந்து எழுத்துக்கள் (வன்னங்கள்) உள்ளன. இதனால் இது திருவைந்தெழுத்து எனப்படுகிறது.

**தத்துவம் என்பதன் பொருள் என்ன?**

மாயையின் காரியமாகக் கொள்ளப்படும் 'தத்துவம்' என்பது 'மூலமாக உள்ள பொருள்' என்று பொருள் தரும். தனு கரண புவன போகங்கள் மாயையிலிருந்து தோன்றும் போது முதலில் தத்துவங்களாகத் தோன்றுகின்றன. தத்துவங்கள் உலகப் பொருட்களுக்கு மூலமானவை.

**சைவத்தில் சொல்லப்படும் தத்துவங்கள் எத்தனை?**

சுத்த மாயையின் காரியமாக ஐந்து தத்துவங்களும் அசுத்த மாயையின் காரியமாக ஏழு தத்துவங்களும் உள்ளன. இவை முறையே சிவதத்துவங்கள் என்றும் வித்தியாதத்துவங்கள் என்றும் கூறப்படும். வித்தியாதத்துவங்களில் ஒன்றான கலை என்னும் தத்துவத்திலிருந்து பிரகிருதிமாயா தத்துவங்கள் என இருபத்தி னான்கு தோன்றும். இவை ஆன்ம தத்துவங்கள் என்றும் கூறப்படும். சைவ சித்தாந்தம் ஒன்றுதான் இந்த முப்பத்தாறு தத்துவங்கள் பற்றிக் கூறுகிறது. மற்றைய தத்துவங்கள் பிரகிருதி மாயா தத்துவங்கள் இருபத்தி நான்கைப் பற்றியே கூறுகின்றன.

**முப்பத்தாறு தத்துவங்களையும் பெயரிடுக?**

1. சுத்தமாயா தத்துவங்கள் (சிவ தத்துவம்) - 5

நாதம், விந்து, சாதாக்கியம், ஈசுவரம், சுத்தவித்தை

2. அசுத்த மாயா தத்துவங்கள் (வித்தியா தத்துவம்) - 7

காலம், நியதி, கலை, வித்தை, அராகம், புருடன், மாயை

3. பிரகிருதிமாயா தத்துவங்கள் (ஆன்ம தத்துவம்)-24

i. அந்தக்கரணம் (4)

மனம், புத்தி, அகங்காரம், சித்தம்

ii. கன்மேந்திரியம் (5)

வாய் (வாக்கு), கால் (பாதம்), கை (பாணி), எருவாய் (பாயு), கருவாய் (உபத்தம்)

iii. ஞானேந்திரியம் (5)

செவி (சுரோத்திரம்), கண் (சட்சு), நாக்கு (சிங்குவை, தாலு), மூக்கு (ஆக்கிராணம்), தோல் (துவக்கு).

iv. தன்மாத்திரை (5)

நாற்றம் (கந்தம்), சுவை (இரதம்), ஒளி (ரூபம்), ஊறு (ஸ்பரிசம்), ஓசை (சப்தம்)

V. பூதங்கள் (5)

நிலம் (பிருதிவி), நீர் (அப்பு), தீ (தேயு), காற்று (வாயு), வெளி (ஆகாயம்)

**பொருளுலகைச் சேர்ந்த தத்துவங்கள் பற்றிக் கூறப்பட்டது. அதில் வரும் கலை குறித்த விளக்கம் என்ன?**

அதில் வரும் கலை இறையருள் தொழிற்படும் நிலையோடு தொடர்புடையது. இது தத்து வங்களில் வரும் கலையல்ல. சிவனின் அருட்சக்தி முப்பத்தாறு தத்துவங்களிலும் வியாபித்து நின்று ஆன்மாக்கள் உய்தி பெற உதவுகிறது. இவ்வியாபகம் ஐந்து நிலைகளில் இவை நிவர்த்தி கலை, பிரதிட்டாகலை, வித்தியா கலை, நிற் கிறது. இந்த ஐந்தையும் ஐந்து கலைகளாகச் சொல்வர். சாந்தி கலை, சாந்தியதீத கலை எனப்படும். பஞ்ச கலைகள் எனப்படும் இந்த ஐந்து கலைகள் ஒவ்வொன்றும் பின்வரும் முறையில் தத்துவங்களுடன் விரவி நிற்கும்.

1. நிவிர்த்தி கலை - மண் (பிருதிவி) தத்துவம் - 1
2. பிரதிட்டா கலை - ஆன்ம தத்துவத்தில் மண் நீங்கலாக மற்றைய தத்துவங்கள் - 23
3. வித்தியா கலை - வித்தியா தத்துவங்கள் - 7
4. சாந்தி கலை - சாதாக்கியம், ஈசுரம், சுத்தவித்தை-3
5. சாந்தியதீத கலை - சிவம் (நாதம்), சக்தி (விந்து) - 2

**பொருளுலகில் உள்ள தத்துவமும் கலையும் கூறப்பட்டன. மூன்றாவதாகிய புவனம் குறித்த விளக்கம் என்ன?**

புவனம் என்றால் உலகம் என்பது பொருள். உயிர்கள் தங்கியிருக்கும் இடங்களைக் குறிப்பன புவனங்கள்.

ஆன்மாக்கள் மூன்று வகை என முன்னர் படித்தோம். விஞ்ஞானகலர் ஆன்மாக்களுக்கு ஆணவப் பிடிப்பு மென்மையாக இருக்கும். பிரளயாகலர் ஆன்மாக்களுக்கு சிறிது கூடுதலாக இருக்கும். சகலர் வகை ஆன்மாக்களுக்கு மிகவும் கூடுதலாக இருக்கும். இந்த மூன்று வகை ஆன்மாக்களும் போகத்தில் செயற்பட மூன்று வகை உலகம் தேவைப் படுகிறது. மாயை சுத்தமாயை, அசுத்த மாயை, பிரகிருதி மாயை என மூவகையாகப் பிரிந்து மூவகை உலகங்கள் தோன்றக் காரணமாகின்றது.

மாயையின் ஒரு பகுதியில் இறையருள் முனைப்புடன் பதிகிறது. இப்பகுதி சுத்தமாயை எனப்படும். இது சிவதத்துவம் எனவும் கூறப்படும். இதில் தோன்றுவது விஞ்ஞானகலர் ஆன்மாக்களுக்கான சுத்தமாயா உலகம் (புவனம். இறையருள் சிறிது குறைவாக முனைத்து நிற்கும் பகுதி அசுத்தமாயை எனப்படும் வித்தியா தத்துவம். இதில் தோன்றுவது பிரளயாகலருக் கான அசுத்தமாயா உலகம். இறையருள் மிகவும் குறைவாக முனைத்து நிற்கும் பகுதி பிர கிருதிமாயை எனப்படும் ஆன்மதத்துவம். இதில் தோன்றுவது சகலருக்கான பிரகிருதி மாயா உலகம். நாங்கள் சகலர் வகை ஆன்மாக்கள்.

**மேற்கூறப்பட்ட மூவகைப் புவனங்கள் ஆன் மாக்களின் தேவை குறித்து அமைந்தன என்பதை அறிகிறோம். இவற்றில் இறைவனின் செயற்பாடு எத்தகையது?**

சுத்தமாயா புவனத்தில் நின்று இறைவன் மூன்று வகையான திருமேனிகளுடன் ஐந் தொழில் செய்கிறான். சிவமும் சக்தியுமான அருவத் திருமேனி இலயத் திருமேனி எனப்படும். இலயம் என்பது ஒடுங்கிய நிலையைக் குறிப்பது. சதாசிவன் கொண்ட அருவுருவத் திருமேனி போகத் திருமேனி எனப்படும். சதாசிவன் ஆன்மாக்களுக்கு சிவபோகத்தைக் கொடுத்து அருள்புரிவதால் அவனின் வடிவம் போகத் திருமேனி எனப்படுகிறது. இலயம், போகம் ஆகிய இரண்டுடன், அவன் கொண்ட மூன்றாவது திரு மேனி அதிகாரத் திருமேனி எனப்படும். இதில் அவன் மகேசுவரன், உருத்திரன், மால், அயனாக நின்று மறைத்தல், அழித்தல், காத்தல், படைத்தல் ஆகிய அருட்செயல்களைச் செய்கிறான்.

சுத்தமாயா புவனத்தில் சிவபெருமான் நேரடி யாக ஐந்தொழில் புரிகிறான். அசுத்தமாயா புவனத்தில் அநந்தேசுவரரை அதிட்டித்து நின்று இவற்றைச் செய்கிறான். இவர் வித்தியேசுவரர் என்றும் கூறப்படுவர். இவர் விஞ்ஞானகலர் ஆன்மாக்களில் ஒருவர். பிரகிருதி மாயா புவனத்தில் சீகண்டருத்திரரை அதிட்டடித்து நின்று இவற்றைச் செய்கிறான். சீகண்டருத்திரர் பிரளயாகலர் ஆன்மாக்களுள் உயர் நிலை பெற்றவர். "அதிட்டித்து நின்று" என்பது 'நிலைக் களமாகக் கொண்டு' என்ற பொருள் தரும்.

**அத்துவாக்களின் முக்கியத்துவம் என்ன?**

உயிர்களுக்கு வினை சேரும் வழிகளாக இருப்பவை அத்துவாக்கள். அத்துவா என்றால் வழி என்பது பொருள். சொல்லுலகில் உள்ள மந்திரம், பதம், வன்னம் ஆகிய மூன்றும் பொருளுலகில் உள்ள தத்துவம், கலை, புவனம் ஆகிய மூன்றும் அத்துவாக்கள். வினை சேர்வதற்கு இந்த ஆறு அத்துவாக்களும் வழி ஆதல் போல, உயிரின் வளர்ச்சியில் மலபந்தம் நீங்குவதற்கும் இவை வழிகளாக உள்ளன.

நிர்வாண தீட்சையில் அந்துவாசுத்தி என்று ஒரு முக்கியமான நிகழ்ச்சி இடம் பெறும். இதனால் உயிருக்கு மேலும் வினை ஏறாமலும் அனுபவத்திற்கு வராமலும் இருக்கும் நிலை உண்டாகும்.

**திருச்சிற்றம்பலம்**

**மூலம் - சைவ சித்தாந்த வினாவிடை (கலாநிதி க.கணேசலிங்கம்)**

# அடியார் பெருமையின் ஆவண ஊற்று - பெரிய புராணம்:

## திருத்தொண்டு நெறிவாழ உதித்த ஞானத்தவ முனிவர் திருநாவுக்கரசர்






**"திருநின்ற செம்மையே செம்மையாகக் கொண்ட திருநாவுக் கரையன்றன் அடியார்க்கும் அடியேன்"**

**அப்பர் பெருமான் திருவாரூர் திருத்தலத்தில் வழிபாடு**

அப்பூதியடிகள், திருநீலகண்ட நாயனார் ஆகியோருடன் சந்திப்பை முடித்துக் கொண்டு, திருநல்லூரை அடைந்த திருநாவுக்கரசர் பெருமான், திருவாரூர் செல்ல திருவுளம் கொண்டார். திருநல்லூர் இறைவரிடம் அருள் விடை பெற்றுக் கொண்டு, பழையாறை, திரு வலஞ்சுழி, கும்பகோணம், நாலூர், திருச்சேறை, திருக்குடவாயில், திருநாறையூர், திருவாஞ்சியம், பெருவேளூர், திருவிளமர் முதலிய தலங்களை வணங்கிக் கொண்டு, பிறந்தாலே முத்தி தரும் திருவாரூர் திருத்தலத்தை அடைந்தார்.

நாவரசர் திருவாரூரில் எழுந்தருள, அதனை அறிந்த திருவாரூரில் இருந்த அடியவர்கள் பலரும் இறைவரின் நிறைந்த திருவருளைப் பெற்றவரை காணும் விருப்பில், காண்பதற்கு இனிய மாளிகைகளையும் மாடங்களையும் முன்னைவிட அழகு சிறக்க அணிசெய்து, அவ் வழகு தொலைவிலும் விளங்குமாறு வீதிகளை விளக்கமுறச் செய்து திருவுடைய மங்கல அணிகளைச் செய்தனர். திருப்பெரும் தொண்டர் வந்தார் என்ற மகிழ்ச்சியால், அளவற்ற தொண டர்கள், நகரமதிலின் வெளியே வந்து எதிர் கொண்டபோது, நாவுக்கரசர் அத்தொண்டர் களைத் தொழுது, போற்றி அணைபவராய், சிறுமையுடைய தமக்கு இவ்வருமையுடைய தொண்டர்க்குத் தொண்டராம் புண்ணியம் பெறத் தகுமோ? எனக் கனிந்து கூறித் தம் செயல் அற்றவராய்த் திருவாரூர்த் திருவீதியைச் சேர்ந்தார்.

அடியார்த் திருக்கூட்டத்துடன் திருக் கோயிலை அடைந்த அப்பர் பெருமான், ஒளிவீசும் பெரிய அழகான புற்றில் வீற்றிருக்கும் இறைவரை நேரே கண்டு மகிழ்ந்தார். அன்பு மிகுதலால் கண்களினின்றும் நீர் மழை போலப் பொழியத், திருமூலட்டான இறைவரின் தாமரை போன்ற திருவடிகளை வழுத்திப் போற்றித் திருத்தாண்டகப் பதிகத்தையும் பாடியருளினார்.

**கற்றவர்கள் உண்ணும் கனியே போற்றி**
**கழலடைந்தார் செல்லும் கதியே போற்றி**
**அற்றவர்கட்கு ஆரமுதம் ஆனாய் போற்றி**
**அல்லலறும் அடியேனை ஆண்டாய் போற்றி**
**மற்றொருவர் ஒப்பில்லா மைந்தா போற்றி**
**வானவர்கள் போற்றும் மருந்தே போற்றி**
**செற்றவர்தம் புரம் எரித்த சிவனே போற்றி**
**திருமூலட்டானனே போற்றி போற்றி**

அதன்பின்னர் மெய்யுணர்வைத்தரும் வகையில்,

**காண்டலேகருத் தாய்நினைந்திருந் தேன்மனம்புகுந் தாய்க ழலடி**
**பூண்டுகொண் டொழிந்தேன் புறம்போயினா லறையோ**
**ஈண்டுமாடங்க ணீண்டமா ளிகை மேலெழுகொடி வானி ளம்மதி**
**தீண்டிவந் துலவுந் திருவாரூ ரம்மானே.**

எனும் பதிகத்தையும் திருவாய் மொழிந்தார். பின்னர் அவர், திருமுற்றத்தின் முன் உள்ள தேவாசிரிய மண்டபத்தைச் சேர்ந்து, திருவாரூரில் வீற்றிருக்கின்ற பெருமானைக் கைகளைக் கூப்பி வணங்காததால், நான் கனியிருக்கக் காய் கவர்ந்த கள்வன் ஆனேன் எனும் கருத்தால், அடைதற்கு அரிய மிக்க துன்பத்தின் மிகுதியால் திருப்பதி கத்தைப் பாடி, அங்குத் தங்கியிருந்தார். தங்கியி ருந்த காலத்தில் திரு உழவாரம் கொண்டு உல கம் எல்லாம் வாழும் பொருட்டுத் திருவீதிப் பணிகளைச் செய்து வணங்கிப் போற்றிப் பரவி வந்தார்.

புகழ்மிக்க திருவாரூரின்கண் மணிப்புற்றினை இடமாகக் கொண்டு எழுந்தருளியிருக்கும் கூத்தரைப், பொருந்திய அன்புடன் எல்லாக் காலங்களிலும் சென்று வணங்கி, குற்றம் இல்லாத வாய்மையுடைய "பாடிளம் பூதத்தினான்" எனத் தொடங்கும் பதிகத்தையும், மற்றும் பல பதிகங்களையும் பாடியருளினார். நமிநந்தி அடிகளின் தொண்டின் நன்மையமைந்த சிறப் பால், பரமரையே போற்றுகின்ற திருவிருத்தப் பதிகத்துள் அவரை வைத்துப் பாடி, தேன் பொருந்திய கொன்றை மலர்களுடைய சிவபெரு மான், திருவாரூர் அரன் நெறியில் விளங்க வீற்றிருக்கும் சிறப்பையும் போற்றி, அழகிய திருவீதிப்பணியையும் செய்து அங்கு விரும்பித் தங்கியிருந்தார்.

**"வேம்பினைப் பூசி"** எனத் தொடங்கும் திருவிருத்தத்தில் வரும் இரண்டாவது பாடல்,

**ஆராய்ந் தடித்தொண்ட ராணிப்பொ னாரூ ரகத்தடக்கிப்**
**பாரூர் பரிப்பத்தம் பங்குனி யுத்திரம் பாற்படுத்தான்**
**நாரூர் நறுமலர் நாத னடித்தொண்டன் நம்பிநந்தி**
**நீராற் றிருவிளக் கிட்டமை நீணா டறியும்மன்றே**

- (தி.4 ப.102 பா.2)

என்பதாகும். இதன்கண் நமிநந்தியடிகள் போற்றப் பெறுவதையே ஆசிரியர் ஈண்டுக் குறித்தருளுகின்றார். மேலும் **"எத்தீப் புகினும்"** (தி.4 ப.17) - இந்தளம், **"பொருங்கை"** (தி.6 ப.33) - திருத்தாண்டகம் இவற்றுள் இரண்டாவது பதிகம் திருவாரூர் திருமூலட்டானத்துப் பெருமானையும் நினைவு கூர்ந்து அருளியதாகும்.

அப்பர் பெருமான் திருவாரூரில் பணி செய்த காலத்தில், திருநீல கண்டரது திருக்கீழ்வேளூர், திருக்கன்றாப்பூர் முதலிய பதிகளுக்கும் சென்று, மனம் கலந்த ஒருமைப்பாட்டுடன் பாடி, நிறைவுறாத ஆசை மிகுதியால் திருவாரூருக்குத் திரும்பவும் வந்தார். பொருந்தும் திருவாதிரைத் திருநாளில் வீதிவிடங்கப் பெருமான் எழுந்தருளி வரும் திருவுலாவில், தேவர்களுடனே முனிவர் களுமாகிய கூட்டத்தில் அவர்களுக்கெல்லாம் முன் நின்று வணங்கும் அடியார்களுடனே கூடி வணங்கி, மூன்று உலகங்களும் மகிழ்ச்சி அடைந்திட வருகின்ற அவ்விழாவின் நெறிமுறை களை எல்லாம் கண்டு போற்றி மகிழ்ந்தார்.

இந்நாளில் திருப்புகலூரில் எழுந்தருளி யிருக்கும் சிவ பெருமானின் திருவடிகளைப் போற்றுதற்குரிய விருப்பம் வரப் பெற்று, திருவாரூரை ஒருவாறாகத் தொழுது, நீங்கித், தம் கருத்தைத் திருவாரூரில் வைத்து, மலையரசன் பாவையாரான உமையம்மையாரை ஒரு கூற்றில் வைத்த பெருமான் எழுந்தருளியிருக்கும் இடைப்பட்ட பிற பதிகளையும் வணங்கிக் கொண்டு திருப்புகலூரை நோக்கிச் சென்றார்.

**திருச்சிற்றம்பலம்**

**திருநாவுக்கரச நாயனார் புராணம் (214 - 230)**

**சிவத்திரு. தென்னாடு நிலவன்**

# ஈசனைத் தேடிய தென்னாட்டுப் பயணம்-

## அருள்மிகு போகமார்த்த பூண்முலையாள் உடனுறை திருநள்ளாற்றீசுவரர் (தர்ப்பாரண்யேசுவரர்) திருக்கோயில் - திருநள்ளாறு

## (தேவாரப் பாடல்பெற்ற 274 சிவபுரங்களில் 115 ஆவது திருக்கோயில் - திருநள்ளாறு)





**"பாடக மெல்லடிப் பாவையோடும் படுபிணக் காடிடம் பற்றிநின்று நாடகம் ஆடும் நள்ளாறுடைய நம்பெருமானிது"**

இன்பதுன்ப அனுபவங்களாகிய போகத்தைத் தன் மார்பகத்தே தேக்கி வைத்து உயிர்களாகிய தம் பிள்ளைகட்குப் பாலாக ஊட்டுகின்ற பெருங்கருணை உடைய தாயார், போகமார்த்த பூண்முலையாளை உடனுறையாக கொண்டு திருநள்ளாற்றீசுவரர் விரும்பி உறைகின்ற பதியே இத்தலமாகும். சனீசுவரனின் கழுவாய்களை நீக்கும் அற்புத்தலமாகவும் இது திகழ்கின்றது. நிடத நாட்டின் மன்னான நளனின் சனிக் கழுவாய் நீங்கப்பெற்றதும் இத்தலத்திலேயாகும்.

**அமைவிடம்: காரைக்கால் மாவட்டம், தமிழ்நாடு**

இத்திருத்தலம் காரைக்காலில் இருந்து 6 கிலோ மீட்டர் தொலைவிலும், கும்பகோணத் தில் இருந்து 60 கிலோ மீட்டர் தொலைவிலும், மயிலாடுதுறையிலிருந்து 40 கிலோ மீட்டர் தொலைவிலும் அமைந்துள்ளது. காரைக்கால், நாகை, மயிலாடுதுறை, திருவாரூர் ஆகிய இடங்களிலிருந்து பேருந்து வசதி உள்ளது.

**இறைவர் திருப்பெயர்: தர்ப்பாரண்யேசுவரர், திருநள்ளாற்றீசர்.**

**இறைவியார் திருப்பெயர்: போகமார்த்த பூண்முலையாள், பிராணாம்பிகை.**

**கோயில் மரம்: வில்வம் மரம், தர்ப்பை மரம்.**

**தீர்த்தம்: நளதீர்த்தம், சிவகங்கை.**

**வழிபட்டோர்: சம்பந்தர்,அப்பர், சுந்தரர், நம்பி யாண்டார் நம்பி,சேக்கிழார், திருமால், பிரமன், இந்திரன், அகத்தியர், புலத்தியர், அர்ச்சுனர், நளச் சக்கரவர்த்தி, திக்குப் பாலகர்கள், வசுக்கள், போஜன், முசுகுந்தச் சக்கரவர்த்தி.**

**பாமாலை: திருஞானசம்பந்தமூர்த்தி, திருநாவுக் கரசு, சுந்தரமூர்த்தி.**

**திருத்தலத்தின் மீது பாடப்பட்டத் திருப்பதிகங்கள்**

**திருஞானசம்பந்தர் அருளிய திருப்பதிகம்**

**போகமார்த்த பூண்முலையாள் தன்னோடும் பொன்னகலம்**
**பாகமார்த்த பைங்கண்வெள் ளேற்றண்ணல் பரமேட்டி**
**ஆகமார்த்த தோலுடையன் கோவண வாடையின்மேல்**
**நாகமார்த்த நம்பெருமான் மேயது நள்ளாறே.** (1-49)

**திருநாவுக்கரசர் அருளிய திருப்பதிகம்**

**உள்ளா றாததோர் புண்டரி கத்திரள்**
**தெள்ளா றாச்சிவ சோதித் திரளினைக்**
**கள்ளா றாதபொற் கொன்றை கமழ்சடை**
**நள்ளா றாவென நம்வினை நாசமே.**(5-68)

**சுந்தரமூர்த்தி நாயனார் அருளிய திருப்பதிகம்**

**செம்பொன் மேனிவெண் ணீறணி வானைக்**
**கரிய கண்டனை மாலயன் காணாச்**
**சம்பு வைத்தழல் அங்கையி னானைச்**
**சாம வேதனைத் தன்னொப்பி லானைக்**
**கும்ப மாகரி யின்னுரி யானைக்**
**கோவின் மேல்வருங் கோவினை எங்கள்**
**நம்ப னைநள் ளாறனை அமுதை**
**நாயி னேன்மறந் தென்நினைக் கேனே.** (7-68)

**திருத்தலச் சிறப்பு**

இறைவனருளால், நளன் சனியின் இடர் நீங்கப்பெற்று, நளன் பூசித்தக் காரணத்தால், 'நள்ளாறு' எனப்படுகிறது. திருஞானசம்பந்தர், திருஆலவாயில் (மதுரை) சமணரோடு நடத்திய அனல் வாதத்தின்போது, இத்தலப் பதிகமான போகமார்த்த பூண்முலையாள் என்ற பதிகத்தை அனலில் இட, அது தீப்பற்றாமல், பச்சைப் பதிகமாய் நின்று, சைவத்தை நிலைநாட்டிய பெருமையும் இத்தலத்திற்கு உண்டு.

இது, முசுகுந்தச் சக்கரவர்த்தி எழுந்தருளுவித்த எழு (சப்த) விடங்கத் தலங்களுள் ஒன்று (தியாகராசர்-நகவிடங்கர் நடனம் - உன்மத்த நடனம்). இது, சனிக் கழுவாய் நீங்கும் சிறப் புடைய தலம். இத்தலத்தில் சிவபெருமானை வழிபட்ட பின்னரே சனிப்பெருமான் சன்னிதிக் குச் செல்ல வேண்டும். இத்தலத்தின் "போக மார்த்த பூண்முலையாள்" என்ற மேலே குறிக் கப்பட்டுள்ள பதிகத்தைப் பாடி சிவபெருமானை வழிபட சனிக் கழுவாய் விலகும். இது, தருமை ஆதீனக் கட்டுப்பாட்டில் உள்ள கோயிலாகும். இங்கு சோழர்காலக் கல்வெட்டுகள் இரண்டும் உள்ளன.

அருள்மிகு போகமார்த்த பூண்முலையாள் உடனுறை திருநள்ளாற்றீசுவரப் பெருமான் குழந்தை இல்லாத தம்பதியருக்கு அருள்புரிபவர் ஆவார். திருமாலுக்கு குழந்தை இல்லாத வேளையில் இத்தலத்தில் வணங்கி மன்மதனை மகனாகப் பெற்றார். அதற்கு பரிசாக முருகப் பெருமானை அம்மையப்பர் இடையே அமர்த்தி அம்மையப்ப முருகர் (சோமாசுகந்தமூர்த்தி)



என்ற புதிய வடிவத்தை உருவாக்கினார். இந்த வடிவத்தை எடுத்து சென்று வழிப்பட்ட இந்திரன், ஜெயந்தன், ஜெயந்தி என்ற குழந்தை களை பெற்றான்.

ஒரு கட்டத்தில் வாலாசுரன் என்பவன் தேவேந்திரனுடன் போருக்கு வந்த போது முசுகுந்தன் சோழ மன்னன் உதவியுடன் போரில் வெற்றி பெற்றான். முசுகுந்தன் சோழன் இதற்கு பரிசாக அந்த அம்மையப்ப முருக மூர்த்தியை பெற்று வந்தான். அதை திருவாரூரில் நிலைப் படுத்தி, அதே போல் மேலும் ஆறு மூர்த்தி களையும் படைத்தான். அவற்றில் ஒன்றை திருநள்ளாறில் வைத்தான். அதுவே தற்போது "தியாகவிடங்கர்" என்று அழைக்கப்படுகிறது. தியாகவிடங்கருக்கு இத்தலத்தில் தனி சன்னதி உள்ளது. தியாகவிடங்கரை வணங்கி வந்தால், குழந்தை இல்லாதவர்களுக்கு குழந்தை வரம் அருள்வார் என்பதும் தொன்நம்பிக்கை.

**திருத்தல வரலாறு**

நிடதநாட்டு மன்னன் நளன் சேதி நாட்டு இளவரசி தமயந்தியை திருமணம் செய்தான். இப்பெண்ணை தேவர்கள் மணக்க விரும்பினர். ஆனால், நளனை அவள் திருமணம் செய்ததால் பொறாமை கொண்ட தேவர்கள், சனீசுவரனை நாடினர். சனியும் அவனை ஏழரை ஆண்டுகள் பிடித்து துன்பப்படுத்தியது. மனைவி, மக்களை யும், உடுத்தும் துணியைக் கூட இழந்து துன்பப் பட்ட மன்னன் நளன் எதற்கும் கலங்கவில்லை.

ஒரு கட்டத்தில் திருநள்ளாறு இறைவனை நளன் வணங்கினான். அப்போது சனியும் அவனை விட்டு நீங்கியது. அவனது வேண்டு கோளின் படி, சனீசுவரனும் இதே தலத்தில் கிழக்கு நோக்கி அமர்ந்து அருள் வழங்கிக் கொண்டுள்ளார்.

**ஒதுங்கிய நந்தி:** இத்தலத்தில் நந்தியும், பலிபீடமும் சுவாமிக்கு எதிரே இல்லாமல் சற்று ஒதுங்கியிருப்பதைக் காணலாம். இடையன் ஒருவன் அரசன் ஆணைப்படி கோயிலுக்குப் பால் அளந்து கொடுத்துவந்தான். கணக்கன் அப்பாலைத் தன்வீட்டுக்கு அனுப்பிப் பொய்க்கணக்கு எழுதி, இடையனையும் அச்சுறுத்தி வந்தான். செய்தியறிந்த மன்னன் கோபம் கொண்டான். அப்போது இறைவன், இடையனைக் காக்கவும், கணக்கனைத் தண்டிக்கவும் எண்ணி தம் சூலத்தை ஏவினார். அந்த சூலத்திற்கு வழிவிடவே இக்கோயிலில் நந்தி பலிபீடம் சற்று விலகியுள்ளது. சூலம் கணக்கன் தலையைக் கொய்தது. இடையனுக்கு இறைவன் காட்சி தந்து அருள்புரிந்தார்.

**திருக்கோயில் அமைப்பு**

அருள்மிகு போகமார்த்த பூண்முலையாள் உடனுறை திருநள்ளாற்றீசுவரர் (தர்ப்பாரண் யேசுவரர்) திருக்கோயில் ஏழு நிலை இராசகோபு ரம் கொண்டு எழிலுடன் காட்சியளிக்கிறது. இத்தலத்தில் மூலவர் சன்னதிக்கும், இறைவியார் சன்னதிக்கும் இடையில் சனீசுவரன் சன்னதி அமைந்துள்ளது. இங்கே சனீசுவரன் தனி சன்னதி கொண்டு அருள்பாலிப்பதால், இக்கோயிலில் ஒன்பான்கோள் (நவகிரகங்கள்) வழிபாடு கிடை யாது. இத்தல இறைவன் தர்ப்பாரண்யேசுவரர் சுயம்பு மூர்த்தியாக அருள்பாலிக்கிறார். இங்குள்ள மூலவர் தர்ப்பையில் முளைத்த சுயம்பு மூர்த்தி. சிவலிங்கத்தின் மீது முளைத்த தழும்பு உள்ளது.

திருநள்ளாறு என்றாலே தீர்த்தத் தலமாகவே பார்க்கப்படுகின்றது. இங்கு நளதீர்த்தம், பிரம்ம தீர்த்தம், வாணி தீர்த்தம். இது தவிர அன்னதீர்த் தம், கங்கா தீர்த்தம் (நள தீர்த்தக்கரையிலுள்ள நளவிநாயகர் கோயிலில் உள்ள கிணறு), எண்திசைபாலகர் தீர்த்தங்கள் என ஒவ்வொன் றும் தனிச் சிறப்புடையவையாகும்.

நளனை பிடித்த சனி, திருநள்ளாற்று இறைவன் திருக்கோயில் வாசலிலேயே விலகி சென்று விட்டது. இதனால் இக்கோயிலில் மக்கள் நுழையும் போது வாசலை தொட்டு வணங்கிச் செல்லும் வழக்கத்தை பேணி வருகின்றனர். இங்கு சனீசுவரன் தங்க காக்கை வாகனத்தில் தங்கக்கவசம் அணிந்து உலா வருவதையும் வழக்கமாகக் கொண்டுள்ளனர். தமிழ் மக்களுக்கு ஈடாக கர்நாடக மாநில மக்களும் இங்கு அதிக அளவில் வருகை தந்து வழிபாடு ஆற்றுகின்றமை குறிப்பிடத்தக்கது.


**திருச்சிற்றம்பலம்**

**சிவத்திரு. தென்னாடு நிலவன்**

# சிவபூமியில் சிவனைத் தேடி

## இராமர் வழிபட்ட ஆதிலிங்கக் கோயில் மட்டுநகர் மாமாங்கேச்சரம்





### திருக்கோயில் மூர்த்தியின் சிறப்பு

கிழக்கிலங்கையில் மூர்த்தி, தலம், தீர்த்தம் முதலிய சிறப்புக்களையும், பண்டைய வரலாற்றுச் சிறப்பினையும் தாங்கி நிற்கும் சிவன் கோயில்களுள், மட்டக்களப்பு மாமாங்கேச்சரமும் ஒன்று.

**"பட்டினப்பாங்கர்ப் பரந்த தோணாமுகமாய் ஐங்கரன் கோயில் அமிர்தகழிக் கனித்தாய்"**

என்று முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகள் தனது யாழ்நூலில் ஓதியதற்கிணங்க, மட்டுநகரிலிருந்து வடக்கு பக்கமாக 5 மைல் தூரமளவில் அமிர்தகழி ஊரில் ஐங்கரன் எனும் திருமேனியில் உள்ளுறை சிவலிங்கமாக உறைந்து அருள்பாலித்து வருகின்றார். புராதன காலம் தொட்டு இவ்விடம் சிவவழிபாட்டுக்குரிய பிரதேசமாக இருந்தமையால் மாமாங்கேச்சரம் என்ற பெயரால் அழைக்கப்பட்டு வந்துள்ளது. இதனால் கருவறையில் இலிங்கம் இருந்துள்ளமை உறுதியாகின்றது. இதற்கேற்றால் போல் இத்திருக்கோயில் கருவறை அமைக்கும் போது, இவ்விடத்திலிருந்த இலிங்கம் நீர் மட்டத்தின் கீழும் நீண்டு செல்வதாக இருந்ததென்று, இவ்வூர்ப் பொதுமக்கள் கூறுகின்றனர். நாளடைவில் கருவறையில் உள்ள சிவலிங்கத்திற்கு விநாயகர், திருமேனி அங்கி பொருத்தப்பட்டு மாமாங்கப் பிள்ளையாராகவும், ஈசுவரனாகவும் வழிபட்டு வருகின்றனர். இவ்வாறு மூர்த்தி சிவனாகவும் அவரின் மகனான ஐங்கரனாகவும் கீர்த்தி பெற்று விளங்குவதனை நோக்கலாம்.

### திருக்கோயில் மரம்

அமிர்தகழி கிராமத்தைச் சூழ அந்நாளில் கொக்கொட்டி, புன்னை, தாழை, குருந்தை, நாவல், பாலை, ஈச்சை காரை போன்ற மரங்கள் அடர்த்தியாக செழித்திருந்தது. அக்காட்டினுள்ளே தான் ஈசுவரன் குடி புகுந்தான். நாளடைவில் குடியேற்றத்தினாலும், சேனைப் பயிர்ச் செய்கையினாலும் இக் காடுகள் அழிக்கப்பட்டாலும், இத்திருக்கோயிலின் கருவறைக்கு முன்பாக நிழற்பரப்பி நிற்கும் குருந்தை மரமே திருக்கோயில் மரமாக அமைந்திருப்பது பெருஞ்சிறப்பாகும். காரணம் மாணிக்கவாசகப் பெருமான் திருப்பெருந்துறையில் குருந்தை மரநிழலின் கீழிலிருந்த சிவபெருமானால் குருவடிவம் கொண்டு ஆட்கொள்ளப்பட்டார் என்பது எல்லோருக்கும் தெரிந்த விடயம். ஆகவே ஈழத்துச் சிவபூமியில் குருந்தை மரத்தை கோயில் மரமாக கொண்ட ஒரே ஒரு தலம் இப்பதியென்று சிறப்பித்துக் கூறலாம்.

### தீர்த்தக்குளம்

இக் கோயிலின் மூர்த்தியைப் பற்றியும், தீர்த்தத்தினைப் பற்றியும் இராமாயண காலத்துடன் தொடர்புபட்ட தொன்நம்பிக்கையான கதைகள் பல இப் பிரதேசத்தாரிடையேயும், இங்குள்ள எழுத்தாக்கங்களிலும் பதிவு செய்யப்பட்டு வந்துள்ளமையை அறியமுடிகின்றது. அவற்றுள் ஒன்று இராமபிரான் தம் வில்லை ஊன்றியதால் இத்திருக்குளம் தோன்றியது என்பது நம்பிக்கை. இராமருடைய பூசைக்காக காலம் தாழ்த்தி அனுமரால் கொண்டு வரப்பட்ட இலிங்கமும் பூசை செய்யப்பெற்று, இத் திருக்குளத்தில் புதைத்துவிடப்பட்டதனால், அப்புனித சிவலிங்கத்தால் இத் திருக்குளமும் அதில் உள்ள சேற்றுக்கழிநீரும் திருவருட்சத்தி படிந்த அமுத தீர்த்தமுமாகியது என்றும், இத் தீர்த்தத்தின் மகிமை புகழப்படுகின்றது.

காசியிலிருந்து வந்த ஒரு முனிவர் தம் கமண்டலத்தில் கொண்டு வந்த கங்கை, யமுனை, சரஸ்வதி, கோதாவரி, துங்கபத்திரை, பவானி, காவேரி, தாமிரபரணி, சேது முதலான ஒன்பது மங்கை தீர்த்தங்களையும் இத் திருக்குளத்தில் கலந்து நீராடி இராமலிங்கத்தை வழிபட்டு பலன் பெற்றார் என்றும், எல்லா மங்கை நதிகளின் தீர்த்தங்கள் கலக்கப் பெற்றதனால் "மாமங்கைத் தீர்த்தம்" எனப் பெயர் பெற்று, நாளடைவில் "மாமாங்கத்தீர்த்தம்" எனப் பேசப்பட்டது என்பர்.

ஆடி மறைமதித் (அமாவாசை) தீர்த்தத்திற்கு பெயர் பெற்ற ஈழத்து சிவன் கோயில்கள் இரண்டு என்று ஈழத்து பூமியில் பேசப்படுகின்றது.



ஒன்று நகுலேச்சர கீரிமலைத்தீர்த்தம், மற்றையது மாமாங்கேச்சர அமிர்தகழித் தீர்த்தம். நாட்டின் பல்வேறு இடங்களிலிருந்து வருகை தரும் பத்தர்கள் ஆடி மறைமதி அன்று இத் திருத்தலத்தில் இறந்த பிதிரர்களுக்கு தங்களது கடன்களை நிறைவேற்றி சிவபெருமானினதும், முன்னோர்களதும் அருளாசிகளை வருடாவருடம் பெற்று உய்கின்றனர்.

மட்டக்களப்பு மான்மியத் தகவல் படி, ஆடகசவுந்தரி என்ற இளவரசி மூன்று மூலைகளை உடையவளாகவும், 117 ஆண்டுகள் கன்னிப்பருவம் அடையாதவளாகவும் இருந்தாள். பின்பு இக்குளத்தின் மகிமையை அறிந்து வந்து நீராடி மூன்றாவது முலைத்தடம் நீங்கப்பெற்றும், கன்னிமையும் பேரழகும் பெற்று குளக்கோட்ட மன்னனை மணந்தாள் என்று கூறப்படுவதிலிருந்து. இத்தீர்த்தத்தின் மகிமை பேசப்படுகின்றது.



சைவப்புலவர்
சுந்தரமூர்த்தி துஷ்யந்த்
கலைமாணி முதுகலைமாணி, பிரான்சு

### திருக்கோயில் வரலாறும், நிர்வாகமும்

இக்கோயிலின் உற்பத்தியை அறிந்து கொள்வதற்கு எவ்விதமான தொல்பொருட்சின்னங்களோ, பட்டயங்களோ கிட்டவில்லை. இருப்பினும் இராமாயண காலத்துடன் தொடர்புபட்டதாக இருப்பதற்குரிய கர்ணபரம்பரைக்கதைகள் உட்பட, மட்டக்களப்பு மான்மிய நூலும் சான்றாக அமைகின்றது. இராமர் வழிபட்ட இலிங்கமே தற்போது இத்தலத்தில் உள்ளது என்பது தொன்நம்பிக்கை. இவ்விலிங்கத்தை இப் பகுதியில் வேட்டையாடும் வேடன் ஒருவன் கனவில் கண்டு வணங்கி, பின் விழித்தபோது, இலிங்க அருட்காட்சி கண்டு, காடு அகற்றி, தூசு நீக்கி தனது இனத்தவர்களை அழைத்து வந்து, சிறு கொத்துப் பந்தல் கட்டி பூசை செய்து வந்ததாகக் கூறப்படுகின்றது.1837ம் ஆண்டு மட்டக்களப்பு நில வரைபடத்தில் இக் கோயில் களி மண்ணால் அமைக்கப்பட்டிருப்பதாகப் பதியப்பட்டுள்ளது.

1880ஆம் ஆண்டு திருக்கோயிலை ஆளுகை செய்யும் சபை உருவாக்கப்பட்டு, பின்பு 1888 ஆம் ஆண்டு இக் கோயிலுக்கு உறுதி வரையப்பட்டது. 1880ஆம் ஆண்டு முதற்குடநீராட்டை இக் கோயில் கண்டது. ஆரம்பத்தில் கொடியேற்றத்துடன் ஐந்து நாள் திருவிழாக்கள் நடைபெற்றது. தற்போது ஆடி மறைமதியை தீர்த்தமாகக் கொண்டு, பத்துநாட்கள் திருவிழாக்கள் நடைபெற்று வருகின்றன. திருக்கோயில் நிர்வாகம் கோட்டமுனைப்பகுதி வேளாளர் பரம்பரையினருக்கும் அமிர்தகழி ஏழுர்க் குருகுல வம்சத்தவர்களுக்கும் உரித்துடையது என்றும் யாப்பில் வரையப்பட்டுள்ளது.

### கோயில் பற்றிய நூல்கள்

மாமாங்கேச்சரரின் புகழைப் பற்றிப் பல புலவர்கள் பல பாடல்களையும், நூல்களையும் அருளியுள்ளனர். வித்துவான் சரவணமுத்தன் அவர்களால் மாமாங்கேச்சுரர் கீர்த்தனை மற்றும் மாமாங்கர் பதிகம் என்னும் நூல்கள் எழுதப்பட்டுள்ளன. பண்டிதர் செ.பூபாலபிள்ளை அவர்கள் மாமாங்கேசுவரர் பதிகம் எனும் விருத்தப்பாவை அருளியுள்ளார். புலவர் மணி பெரியதம்பிப்பிள்ளை அவர்கள் மாமாங்கேச்சுரப்பதிகம் அருள, மண்டூர் பூ.சின்னையா அவர்கள் மாமாங்கப்பிள்ளையார் விருத்தம் எனும் நூலை அருளியுள்ளார். இவையெல்லாம் பத்தி ததும்பிய பனுவல்கள் ஆகும். இக்கோயில் வரலாறு பற்றி இன்று எமக்கு இரு நூல்கள் கிடைத்துள்ளன. அவை "ஸ்ரீ மாமாங்கப் பிள்ளையார் வரலாறு" மற்றயது "மாமாங்கப் பிள்ளையார் மான்மியம்" என்பனவாகும்.

கிழக்கிலங்கையில் குறிப்பாக மட்டு தேசத்தில் கொக்கட்டிச் சோலை சிவன் கோயிலுக்கு அடுத்ததாக வைத்துப் போற்றக்கூடிய சிவன் கோயில் மாமாங்கேச்சரம் ஆகும். கிழக்கிலங்கையில் பிதிர்கடன் புரிவதற்குரிய மகத்துவமான ஈச்சரமுமாகும்.

**"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"**

**திருச்சிற்றம்பலம்**





**Siva P.Ketharan**
English Editor – Thennadu
Thennadu Tamil Atheenam (Madam) – Australia
+61 49949 3300, ketharan@thennadu.org




# Importance of Saiva Temples in Foreign Countries

Temples were and continue to be integral to Saivaite culture and tradition. They are sacred places of worship that transcend geographical boundaries, that allow Saivaites from all corners of the world to foster spiritual connections with God. However a temple is not just limited to a place of worship, moreover, it is a place of facilitating and promoting ancient Saiva practices such as Tamil language classes, Thevaram study and education on the philosophies of Saivam. As diasporic communities expand across the world the presence of temples becomes even more crucial in preserving and propagating Saivam values and practices.

For diaspora Saivaite communities, having access to proper facilities to pray to god was once an obstacle. However, now with the growing number of temples all over the world, worshippers have a safe and positive environment for them to pray and connect with god. Temples in diaspora countries are integral in fostering the growth and preservation of Saivam amongst Saivaite communities and hence they have an important role in ensuring positive measures are taken in order to safeguard tradition and culture for many generations to come.

Temples serve as a hub of ancient traditions, rituals and practises. They are guardians of cultural heritage, preserving the wisdom, stories, and customs that have been passed down through generations. Temples provide a space where individuals can learn and engage in these traditions, ensuring their continuity. Temples serve as a place of education where all individuals can attend to study the ancient customs of Saivaite Culture to gain a better understanding not only for themselves but also for them to relay this learnt information to their friends and family.

For Diaspora communities, temples play a vital role in maintaining cultural identity. Temples act as a tangib'e connection to their homeland and enable individuals to assimilate into their new life. Temples bring diaspora Saivaites together into one place, where they can work together to contribute more to society and future generations by creating initiatives that promote and sustain Saivaite Traditions. These large communities of worshippers, together, can work towards planning and promoting various programmes and events such as Tamil language classes, Thevaram study and education on the philosophies of Saivam to teach values and philosophies of Saivam to future generations.

In conclusion, temples are a significant aspect of Saivaite culture and tradition and are essential in enabling worshippers to foster a greater connection with God. However, more than that temples and temple communities should work towards creating a place of education where students, and all others interested, can come to learn more about Saivam and the rich culture and tradition that it has. These kinds of initiatives will have a much larger impact on diaspora Saivaites as education and learning are more interactive mechanisms in creating a connection between a soul and god. This will nurture a stronger belief within individuals, which they can then use to educate others and future generations.


# Saiva Saint Thirugnanasampanthar Swamikal




Siva P.Abiram SG


Thirugnanasampanthar was a Saiva Saint, who lived in the seventh century CE.He is one of the most prominent saints amongst the 63 Nayanars. Sampathar's entire collection of hymns about Lord Shiva is called "Thirukkadaik kappu''. These were later collected to form the first three volumes of the Thirumurai – one of the principle texts of Saiva Sithantham philosophy.

Sampanthar was born in Sirkazhi to Sivapatha Viruthayar and his wife Pagavathiyar. One day when his father was going to the temple as usual, little Sampanthar who was three years now, was adamant that he would go with his father. The father took him along. When they reached the temple, Sivapatha Viruthayar wanted to take a dip in the holy pond of the temple. He left Sampanthar on the banks and told him to be there until he returned after his bath. Young Sampanthar nodded his head and watched his father go into the pond.The father would dip his head and all in the pond and reappear again. This happened again and again and when once Sampanthar's father decided to hold his breath longer under the water young Sampanthar panicked as he could not see his father. He cried out "Amma.. Appa '' in anguish. Noticing the crying child, Sivan and Parvathi appeared before him and Goddess Parvathi fed him with milk from a golden cup. By that time the father had finished his dip and came up. He saw milk drooling from the mouth of Sampanthar And got very angry.He asked his son angrily, "Sampanthar, who gave you the milk and why did you drink it?" Sampanthar did not say anything. The father got very very angry and took a small stick and threatened to beat the child and said "Tell me. Tell me now. Who gave you the milk?" Sampanthar pointed to the sky and responded with a hymn "Thodudaiya Seviyan '' The song goes as follows.



**Thodudaiya cheviyan vidai eeriyoor thuuven madhi choodi.**
**kaadudaiya sudalaip podi poosy ennullam kavar kalvan.**
**Eedudaiya malaran munainaat panindheetha arul seidha.**
**Peedudaiya piramaapuram meeviya penman evan andree.**

In English this means, the God who wears earrings and rides on a bull, wears the moon on his head like a crown. He smeared himself with the ash in the cremation ground, he has stolen my mind and bestowed his grace on Peruman who is seated on a lotus.He is the one who resides gladly in Piramapuram possessing greatness.

Sampanthar also performed many miracles in his time.One day when Sampanthar was going to Thirupachilachiramam, a town ruled by Kollimalavan. Kollimalavan had a daughter who was frequently affected by epilepsy. All of the attempts to cure her from epilepsy had failed, Kollimalavan went to the sivan temple and laid his daughter flat on the floor in front of sivan as a final attempt to cure his daughter. When Kollimalavan heard that Sampanthar was visiting, he welcomed him with kindness. Sampanthar entered the Sivan temple and saw the girl lying on the floor, after Kollimalavan explained what happened, Sampanthar prayed to Sivan with the hymn Thunivalar Thingal asking Sivan to cure her. As soon as Sampanthar finished singing the daughter rose up and the daughter and King Kollimalavan fell at his feet.

# Introduction to Saiva Sithantham (Saiva Philosophy)






**M. Sivashunmugam**
**Professor**
**Saiva Siththantha Direct Training Centre, Thiruvavaduthurai Aatheenam.**

### What are Thirumuraikal and Sathirangal

Every religion has a basic book to follow. The rules of the religion are defined there and the people have to follow as their prime document. Saiva samayam [religion] has 2 sets of such prime books.

1. Thirumuraikal.
2. Sathirangal.

We have 12 books as Thirumuraikal and 14 books as Sathirangal.

12 Thirumuraikal are the compilation of work done by 27 authors whereas Sathirangal are from 6 authors.

Thirumuraikal are the songs which are sung in praise of Lord Siva. It has a music format as pan (பண்) in Tamil music. Pan is like Ragha in the Karnatic music and Pan format is one of the oldest systems in the music world.These are normally sung in the temples by the designated people called Othuvars. These Thirumuraikal are kept in every saivite house and are sung. These songs have a strong impact and are called Tamil mantras. Mantras has the spiritual power and one who thinks of it, gets the benefit. It is proven that people who sing Thirumuraikal songs are blessed by God and they have a happy life. In this world of speed and stress, people are able to be calm and peaceful when they sincerely sing Thirumuraikal songs.

### Authors of Thirumuraikal

Thirugnanasampanthar, Thirunavukkarasar and Sundaramoorthi swamikal have given us about 8200 songs from the first 7 Thirumuraikal. Out of these 7 Thirumuraikal, the first 3 are from Thirugnanasambandar , the next 3 are from Thirunavukkarasar and the 7th is from Sundaramoorthi swamigal.

Manickavasakar has written Thiruvasakam and Thirukkovaiyar which has about 1000 songs in total which is the 8th Thirumuraikal. Thirumaaligaithevar, Senthanaar, Karuvoor thevar, Poonthuruthi Nambikada nambi, Kandaraathithar, Venattadigal, Thiruvaliyam udhanaar,Purudotthamar and Sethiraayar contribute the 9th Thirumuraikal which is called as Thiruvisaippa and Thiruppallandu. In total there are 301 songs in this Thirumuraikal.

Thirumantiram is the 10th Thirumuraikal which is by Thirumoolar. There are 3000 songs in this Thirumuraikal.

The 11th Thirumuraikal is a package of 40 books written by 12 authors. One among the 12 is Lord Siva himself. Lord Siva, Karaikal Ammaiyar, Nakkirar, Cheraman perumal nayanar, Iyadigal kadavar kone, Pattinatthar, Kallaadar, Kabilar, Paranar, Ilamperumaanadigal, Adhiraadigal and Nambiyaandaar Nambi are the 12 authors. About 1400 Songs are available in the 11th Thirumuraikal.

Thirutthondar Puranam [called as Periya Puranam] is the 12th Thirumuraikal which was done by Sekkizhar. About 4200 songs are in Periyapuranam.

It is the basic duty of every saivite to worship these 27 authors for the great work done by them with pure kindness.

### Authors of Sathirangal

Regarding Sathirangal, Sivagnanabotham is the apex book which was done by Sri Meikandar. His disciple Sri Arulnandi sivam gave two books which are Sivagnana Siddhiyar and Iruba Irubagathu. Sri Mei kandar's another disciple Sri Mana vasagakadanthaar wrote Unmai Vilak kam. Thiruviyaloor Uyyavandhadeva nayanaar gave Thiru vunthiyaar and Thiru kadavoor Uyyavandhadeva nayanaar presented Thirkkalitrupadaiyaar. Umapathisivam gave a big contribution with the following 8 books which are called Siddhantha attagam.

1. Sivaprakasam.
2. Thiruvarutpayan.
3. Potripakrodai.
4. Kodikkavi.
5. Vina venba.
6. UnmaiNeri vilakkam.
7. Nenjuvidu thoothu.
8. Sankarpa Niraagaranam.

Six Authors have given a total of 14 Sathirangal which are to be studied. Saiva Siddhantha philosophy is given elaborately in these 14 Sathirangal. Every book is important with a unique aspect.

The saiva philosophy which is basically a logical, optimistic and perennial one is very well established by these authors. As saivites we owe a lot to these authors. In total about 1300 songs are there in the Sathirangal.

Apart from these 26 documents [12 Thirumuraikal + 14 Sathirangal] given by these 33 authors, we also follow some other works given by the teachers who sincerely follow these 33 authors. Sivagnana Swamigal, Pamban Swamigal and Kumaragurubara swamigal and the list goes on.

Anyone who studies and follows a religion is expected to know about the prime books of that religion and the authors. This is applicable to all the religions from any part of the Universe.

As a saivite we are blessed with a philosophy which gives a definite answer to any question in the spiritual field. It is our prime duty to study these books in deep and lead a life as directed in these books. It is also equally important to share these with the next generation so that this wealth is taken care of and can be experienced ever by everyone.

Note : In our next article, let us understand more about the authors who have followed the Thirumuraikal and Sathirangal and also give an introduction to some of the works done by them.

Thiruchitrampalam

# Lord Murugan - From six babies to the god of war

Chief deity of the ancient Tamils, son of the warrior goddess, god of war and victory is a paramount part of our culture and belief system. He is the slayer of demons and keeps tamils safe from harm. It was believed to be said that Lord Murugan was born from the 6 sparks from Lord Shiva's 3rd eye. Agni the fire god carried these sparks to the pond known as saravana where six babies were born on a lotus each. When lord shiva and goddess parvati came, parvati took all six babies and hugged them into one being with 6 heads.

Ever since the birth of lord murugan the Thevar relentlessly attacked trakasura and his asura army. While they were proceeding into battle however, a heavenly voice said from the sky that the Thevar's could only win if kartikeyan was their commander. The Thevars then requested that lord murugan to become their commander and thankfully lord murugan accepted the request. Lord Murugan led the Thevars into battle against the asuras and came out victorious.

One day Lord Siva was relaxing in Mount Kailash with his wife Goddess Parvathy and sons, Lord Ganesh and Lord Murugan. Suddenly, Sage Narathar appeared and offered a gift of a golden mango to Lord Siva. Narathar said "This is not an ordinary mango. This is the golden mango of knowledge and whoever eats this mango will be granted with eternal knowledge and wisdom." As a loving husband, Lord Siva gave it to Parvathy and requested her to eat it. As a loving mother, she wanted to give the fruit to her children. Because there was only one fruit that shall not be cut they




decided to announce a contest between their two children to see which one could go around the world 3 times.

Lord Murugan mounted on his peacock to go around the world. In the meantime, Lord Ganesh slowly made his way to his parents and started circling his parents three times. Siva and Parvathy were perplexed and asked Ganesh, "Child, you were supposed to circle the world, so why are you circling us instead?". Ganesh replied, "You, my parents are my universe and my whole world. So, if I circle you, it means that I have circled the entire world". Saying this, He finished his third circle just as Lord Murugan reached Mount Kailash after finishing his third trip across the world.



Aran Sivasuthan
Grade 6
Sydney

Murgan was short tempered and flew off to a temple near the hillside now known as Palani. Lord Siva and his wife Parvathy had to caress him and say that " he was the fruit" to comfort him.

Thiruparankundram, Tiruchenthur, Palani, Swamimalai, Tirutthanikai and Palamuthircholai are the 6 abodes of murugan which are located in the suburban places of South India. The significance of these six temples are that they represent different stages in lord murugan's life.

As fellow tamil people we should pray and honor Lord murugan our tamil god as the blessings of him awakens wisdom which resides in his chakra. Devotees look to him for healing of the body and mind as well as strength to fight life's challenges. The almighty lord murugan was born to fight demons for instance soorasamharam, and be the almighty chief of the army of devas and to be the symbol of polarities. Murugan is the bridge to all our necessities and we must pray to him as fellow devotees.

**Note: Puranas and Stories explain the great, non-delusive Tamil philosophy.**

Om Saravana Pava


# Kundrathu Kumaran Murugan Temple



The Kundrathu Kumaran Murugan Temple in Melbourne stands as more than just a physical structure; it serves as a profound symbol of connection and continuity for Tamil Saiva people. This sacred space not only anchors the community in their heritage but also provides a sanctuary for preserving their cherished traditions.

For Tamils living in Melbourne, maintaining their cultural identity can be challenging amidst the diverse fabric of modern society. Yet, this temple stands as a steadfast guardian, ensuring that the flame of Tamil culture continues to burn brightly. By embracing their language, rituals, and customs within its walls, community members find solace and belonging, as if they've transported a piece of their homeland to their new abode.

The temple serves as a conduit for intergenerational wisdom transfer. As older members recount tales of their ancestral lands, a bridge forms between generations, fostering understanding and appreciation for the journey that brought them here. It's an invaluable opportunity for younger individuals to connect with their roots and imbibe the values that have shaped their people for centuries.



Siva. Vidhujan
Sivasuthan
Year 8
Melbourne, Victoria.

At the heart of the temple's ethos lies Saivam, an integral facet of Tamil culture. The veneration of Lord Murugan not only instills a deep spiritual connection but also encapsulates the ethos of heroism and virtue. Through the lens of Saivite principles, the festivals celebrated, like Thai Pongal, become more than mere festivities; they metamorphose into guiding lights, reminding the community of their commitment to discipline, compassion, and personal growth.

Within the temple's hallowed halls, an air of tranquility prevails. Engaging in prayers, performing rituals, and showing reverence to Lord Murugan evokes a sense of unity with something greater. It's as if every gesture reaffirms their membership in a shared heritage and guides them toward making ethical decisions that reflect the essence of their culture.

Indeed, the temple's role transcends that of a place of worship; it assumes the role of an instructive institution. Workshops and discussions offer a platform for delving into Saivite tenets, narratives, and the intricate tapestry of traditions. This dynamic approach to learning ensures that the cultural flame is not merely preserved but also understood and embraced in all its richness.

In essence, the Kundrathu Kumaran Murugan Temple stands tall as a testament to the resilience and determination of the Tamil Saivite community in Melbourne. It's a cherished bridge, not just linking their new home to their ancestral lands, but also connecting the past with the present, and the older generation with the younger. This sacred space beckons all who enter to find their identity, preserve their heritage, and strive to lead lives of honor and virtue.

# Eliminate Sin with Thirumurai : Idarinum Thalarinum

Saint Thirugnanasampanthar sang this Thevaram requesting for gold from Sivan (Masilamaneeswarar Temple, Thiruvavaduthurai). It's believed by siva followers, anyone who sings this Thevaram will get wealth in their life.



**Idarinum thalarinum enathuru nōy**
thodarinum unakalal tholuteluvēn;
kadalthanil amuthodu kalantha nanchai
midarinil adakkiya vēthiyanē,

ithuvō emai aalumaaru eevathu onru emakku illaiyēl
athuvō unathu innarul aavaduthurai aranē.

**Vaalinum saavinum varunthinum pōy**
veelinum unakalal viduvēn allēn;
thaalilam thadampunal thayangu sennip
pōl ilamathi vaiththa punniyanē.

ithuvō emai aalumaaru eevathu onru emakku illaiyēl
athuvō unathu innarul aavaduthurai aranē.

**Nanavinum kanavinum nampaa, unnai**
manavinum valipadal maravēn, am'maan
punalviri narungkonraip- pōthu anintha
kanaleri analpulku kaiyavanē.

ithuvō emai aalumaaru eevathu onru emakku illaiyēl
athuvō unathu innarul aavaduthurai aranē.

**Thum'malodu arunthuyar thōnridinum**
am'malar adi'yalaal, ararraathu en naa;
kaim'malku varisilaik-kanai onrinaal
mum'mathil eri ela muninthavanē.

ithuvō emai aalumaaru eevathu onru emakku illaiyēl
athuvō unathu innarul aavaduthurai aranē.

**Kaiyathu veelinum kalivu urinum**
seikalal adi'alaal sinthai seiyēn,
koy ani narumalar kulaaya senni
mai'ani midaru udai maraiyavanē

ithuvō emai aalumaaru eevathu onru emakku illaiyēl
athuvō unathu innarul aavaduthurai aranē.

**Venthuyar thōnri ōr veru'urinum**
enthaai, un adi'alaal ēththaathu, en naa;
ainthalai aravu kondu araikku asaiththa
santhavenn podi'ani sangaranē.

ithuvō emai aalumaaru eevathu onru emakku illaiyēl
athuvō unathu innarul aavaduthurai aranē.

**Veppodu viravi ōr vinai varinum**
appaa, un adi alaal ararraathu, en naa;
oppudai oruvanai uru aliya
appadi alal ela viliththavanē.

ithuvō emai aalumaaru eevathu onru emakku illaiyēl
athuvō unathu innarul aavaduthurai aranē.

**Pēr idar peruki, ōr pini varinum**
seer udaik kalal alaal, sinthai seiyēn;
ēr udai mani mudi iraavananai
aar idar pada, varai adarththavanē.

ithuvō emai aalumaaru eevathu onru emakku illaiyēl
athuvō unathu innarul aavaduthurai aranē.

**Unninum pasippinum uranginum nin**
onmalar adi'alaal uraiyaathu, en naa;
kannanum kadikamal thaamarai mēl
annalum alappu arithu aayavanē

ithuvō emai aalumaaru eevathu onru emakku illaiyēl
athuvō unathu innarul aavaduthurai aranē.

**Piththodu mayanki ōr pini varinum**
aththaa, unadi alaal ararraathu en-naa;
puththarum samanarum puran uraikkap
paththarkadku arul seithu payinravanē,

ithuvō emai aalumaaru eevathu onru emakku illaiyēl
athuvō unathu innarul aavaduthurai aranē.

**Alaipunal aavadu thurai'amarntha**
ilai-nunai vēl-padai em iraiyai
nalam'miku jnaana-sampanthan sonna
vilai-udai arun-thamil maalai vallaar


vinai aayina neenkip-pōy vinnavar viyan ulakam
nilai'-aaka munēruvar; nilamisai nilai-ilarē.

Thiruchchittrampalam

# Saivam – Non-Delusive Religion

ஓது சமயங்கள் பொருள் உணரும் நூல்கள்
ஒன்றோடு ஒன்று ஒவ்வாமல் உளபலவும் இவற்றுள்
யாது சமயம் பொருள்நூல் யாது இங்கு என்னில்
இதுவாகும் அதுவல்ல எனும்பிணக்கது இன்றி
நீதியினால் இவை எல்லாம் ஓரிடத்தே காண
நின்ற யாது ஒரு சமயம் அதுசமயம் பொருள்நூல்
ஆதலினால் இவையெல்லாம் அருமறை ஆகமத்தே
அடங்கியிடும் அவை இரண்டும் அரனடிக்கீழ் அடங்கும்

( சிவஞானசித்தியார்- R+8.3) - Sivagnana Siddhiyar Su 8.3



There are many religions in this landscape. Tenets of each one of these religions and their explicatory texts are many indeed. They are not necessarily in agreement with one another. Among these religions, which is the foremost? What explicatory texts of these religions are there to deliberate on its essence? Is there a religion that does not have controversies, does say 'this is and this is not', and declares all the just principles in one place? The texts that explicate its tenets in a clear fashion are the exponent of the absolute Truth. That being so, all religions inhere and abide in sacred texts and Agamas. The Sacred Texts and Agamas abide under the feet of Siva.

Saiva Sithantha holds the view that people have created many religions, each one of which is an exact fit for and compatible with the degree of maturity of the individual soul. Having experienced embodied life in each one of the external religions, becoming mature in that religion and transcending all the internal controversies in that religion, the soul eventually will arrive at the just tenets of absolute Truth. After its arrival, the soul will acquire Sivagnana Potham (Pedagogical Learning of Sivagnana) and attain liberation.


**Thiruchchittrampalam**

# தென்னாட்டு நிகழ்வுகள்





தென்னாட்டில் ஆடி மறைமதி (அமாவாசை) வழிபாடுகள் (15-08-2023)



ஆடித் திங்கள் தேய்பிறைக் கழுவாய் வழிபாடு (13-08-2023)





கொழும்பு வெள்ளவத்தையில் தெய்வத்தமிழில் இறுதிச் சடங்கு வழிபாடுகள் (20-08-2023)





ஆடித் திங்கள் நிறைமதி வழிபாடும் இதழ் வெளியீடும் (01-08-2023)

தென்னாடு செந்தமிழாகம சிவமடம் மற்றும் சைவ மாணவர் சபையின் முப்பத்து ஆறாவது திங்கள் செய்தியிதழ் “தென்னாடு”, சிவத்திரு.சிவஞானம் ஜெயானந்தன் அவர்களால் வடிவமைக்கப்பட்டு மடங்கல் நல்லோரை ஆவணித் திங்கள் 13ம் நாள் நிறைமதி அன்று (30-08-2023 புதன்கிழமை) தென்னாட்டில் வெளியிடப்பட்டது. முதலாம் தமிழ்ச் சங்கம் கண்ட தென்னாடு என்பதை மனதில் நிறுத்தி, தென்னாடு செய்தியிதழையும் இயன்றளவு பிறமொழிக் கலப்பின்றி தெய்வத்தமிழில் தர முயற்சிக்கிறோம். சைவ மாணவர் சபை பதிவு இலக்கம் - HA/4/JA/343.

தொலைபேசி +94 21 221 2739 | புலனம் +94 (70) 770 1111| மின்னஞ்சல் thennavan@thennadu.org | fb.com/thennadu | youtube.com/thennadu | www.thennadu.org